


மகா மகத்துவ காருண்ய உத்தமோத்தம

# ஐந்தாவது ஜோர்ச்

## சக்கரவர்த்தியாரது

### 1911ஆம் ஆனிமீ 22உ நிகழும்

மகுடாபிஷேக மகோத்ஸவ

மங்கலவாழ்த்து.

---

**முடி**

செங்கோறழுவிநடப்போர்க்குநீதிச்செழுஞ்சபைக்கும்
மங்காதவாயமையமைச்சர்க்குந்தாழ்ந்துமருவலர்க்குச்
சிங்கேறுபோன்றுநிலைநின்றுவாழ்கதிறன்மருவுஞ்
சிங்காரஜோர்ச்சேனுமன்னவன்சூடுந்திருமுடியே.

**வாள்.**

மின்னலைவெல்லும்பிரபையைக்கண்டுமிகநடுங்கித்
தந்நிலைகெட்டுப்பகைவர்களோடுந்தகைபுரிந்து
துன்னெறிமாற்றிநிலைபெற்றுவாழ்கதுலங்குமுடி
மன்னவன்ஜோர்ச்சுகரத்தினின்மேவியவாட்படையே.

**கோடி.**

வருமிகனீக்கிச்சமாதானஞ்செய்துமகிதலத்தி
னொருமையினேகிக்குளிர்நிழலாற்றிவுயர்ந்தெழுந்து
பெருமைபடைத்துநிலைநின்றுவாழ்கபிரபலஞ்சேர்
பெருமகன்ஜோர்ச்சேனுமன்னவன்வெற்றிப்பெருங்கோடியே.

**வாழி.**

வாழியசக்கரவர்த்திநல்ஜோர்ச்சேனுமன்னர்பிரான்
வாழியசக்கரவர்த்தினிமேரிவளம்படைத்து
வாழியசூரியனத்தமியாநிலம்வாழ்குடிகள்
வாழியவங்கவன்செங்கோல்நிலைபெற்றுவாழியவே.

பத்திராதிபர்.

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

மதுரையிலே இந் நான்காந் தமிழ்ச் சங்கமிரீஇயினார் பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள். இவர்களே, செந்தமிழ்மொழியிலே கொண்டுள்ளகாதல்பழுத்தமைதலால் அதற்கு ஏமமார்க்கும் விரதநெறியேசடைப்பிடித்துநிற்குமோர்செந்தமிழ்க்கற்பகமேயோ, செழுங்கலைமதிவழியுதித்துச் செந்தமிழ்ச்சுவைசெவ்வியினுகரும் வழுதியர் தம்மொருவான்கலை கொல்லோ எனத்தமிழுலகம் போற்று நிற்கும். இச்சங்கமிருவிக்கலாசாலை கவினுறச் செந்தமிழ்ப்புலவர்களைத் தேயங்கடோறும் தெரிந்துகூட்டி அவ்வவர்க்கேற்பன தகுதியினீந்து அவர்வாயிலாகத் தொல்லைநூல்பல வழுவறவாய்ந்து நின்றுநிலவுறவிடுத்தும், நூல்களை இயற்றுவித்தும், பாவலர் பருகிச் சுவைத்தினிதுமகிழ்பூப்பப் பன்னூற்றிரட்டு சைவமஞ்சரி என்றற்றொடக்கத்து நூல்கள் பலவற்றை இயற்றிவிடுத்தும் "செந்தமிழ்" என்னும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையினை நாடெங்கும் தமிழ்மணங் கமழ்ந்து பரவுறவிடுத்தும், இப்புலவர் புரவலாளர் செந்தமிழ்வளர்ச்சி நோக்கிச் செய்துவரும் கைமாறற்ற செயற்கருஞ் செயல்களுக்கு, நம் செந்தமிழுலகம் அப்புலமைசானும் கலைமகள் நிலயமாயினார்க்குக் கடப்பாடுபூண்டு "நம் செந்தமிழ்ப் பாண்டியரேயோ?" என்றென்று மறவாதிருத்தலன்றி வேறென்னாற்றும்.

தமிழ்மொழியினையும் அதன்வழக்கையும் சீசீ என்றேசினாரெல்லாம் ஏஏ எனவெள்குற மாணவர்களைப் பரீக்ஷித்துத் தகுதியின்வழியே பட்டங்களும் பரிசில்களுமீந்து செந்தமிழ்வழக்கு ஒருவாறொடுங்குங்காலையினாற்றதோர் களைகணாகி விளக்கமுறச்செய்து இவ்வனம் பசுந்தமிழ்பாலிந்தும் பான்மை மேனாட்டொடங்கிப்பரம்பரையாகச்செய்து கைவந்தமையின் இவர்மரபினார்க்கு இயற்கையினமைந்து நின்றதொரு பண்பேயாகும். புலமையின் நிலைமைகண்டு கொடைமடக் கலத்தினேறி மறைவாணர் செஞ்சொலறிவாளர் இரவலர் எனப்படுமிக் கடல்களைக் கடந்த இவர்கள்தந்தையார் ஸ்ரீமான். பொன்னுச்சாமித் தேவரவர்களை அறியாதார் யாவர்.

தலைச்சங்கம் கடைச்சங்கம் இடைச்சங்கம் எனப்பட்டதென்னே ஒன்றே இரண்டே மூன்றே என்னாது என்று தோலாநாவின்மேலோர் வாழ்த்த நாலாஞ்சங்கம் நலமுறக்கண்டு ஐயிருவருடஅருமையின்வளர்த்துச் செஞ்சொலறிவாண்மை கொண்டு நிலைபெற நிறுவிய எம்புலவர்கள் புரவலாளரும் செந்தமிழும் சங்கமும் சங்கப்புலவர்களும் இன்றுபோல் என்றும் நிலவிலங்கிவளர, சங்கநூற்புலவனை அங்கயற்கணம்மைபாகனை ஆலவாயடிகளை அருண்மழை பொழிந்துகாக்க அடிமலர்பரவுதும். ப-ர்.

# ஞானப்பிரகாசம்.

“தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.” திருக்குறள்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம்-க. யாழ்ப்பாணம்:—விரோதிகிருதுவூ வைகாசிமீ. இலக்கம்-கo.


உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
        மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
        யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
        யனைத்தும்வென் றுரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
        யுண்ணினந் தேத்தல் செய்வாம்.

## ஞானப்பிரகாசம்

### மாகம்.

மாகம் என்பது வடமொழியிலுள்ள வான்மீகம், பட்டிகாவியம், இரகுவமிசம், குமாரசம்பவம் முதலிய காவியங்களுள்ளே பெரிதுஞ் சிறந்துவிளங்கும் ஒரு பெருங்காப்பியம். இது மாகர் என்னும்பெயருடைய மஹாகவிஞராற் செய்யப்பட்டமையால் “மாகம்” என்னும் பெயருடையதாயிற்று. இந்தக்காப்பியத்தாற் சொல்லப்படுஞ் சரித்திரம் யாதோ என்னின்; இந்திரப்பிரத்த நகரத்திலே தருமபுத்திருடைய இராயசூய யாகத்துக்குப் போயிருந்த கண்ணபிரான் அங்கேவந்த அரசர்களுள்ளே தம்மை நிந்தித்த சிசுபாலனைவதைசெய்த சரித்திரம். சிசுபாலனுடைய வதையைக் கூறுதல்பற்றி இக்காப்பியத்துக்குச் “சிசுபாலவதம்” எனவும் ஒருபெயருண்டு. வதம்—கொலை.

சிசுபாலன் என்பவன் யாவன்? சிசுபாலன் என்பவன் தமகோஷன் என்பவனுடைய தனயன். தமகோஷன் மகன் என்று பொருள்படுகின்ற தத்திதாந்த நாமமாகிய “தாமகோஷன்” என்னும் பெயரும் இச்சிசுபாலனுக்கு உண்டு. இந்தச் சிசுபாலனுடைய தாய்க்குச் “சாத்துவதி” என்றும், “சுருதசிரவசு” என்றும் பெயர். சாத்துவதி என்பது சத்துவதன் என்பவனுடைய புத்திரி என்பதனைக்கருதுந் தத்திதாந்தநாமம். இந்தச் சாத்துவதி கண்ணபிரானுடைய பிதாவின் சகோதரி. இந்தச் சிசுபாலன் சேதிநாட்டுக்கு இராசனாயிருத்தல்பற்றி இவனுக்குச் சைத்தியன் என்றும் பெயர். “சேதி

மன்னவன்'' "சேதிப்பதி" என்று பாரதகாரருங் கூறுவர். இவனுக்கு நான்குபுயங்களும் மூன்று கண்களும் உளஎன்பர். இவனுடைய சரித்திரம் பாரதத்திலே இராசசூயச் சருக்கத்திலுஞ் சுருக்கமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தமாககாப்பியம் சரித்திரத்தினுற் சிறிய தாயினும் சருக்கங்களாலே மிகவும் பெரியது. ஏறக்குறைய இருபது சருக்கங்களிருக்கின்றன. இச்சருக்கங்களிலே கூறப்படுவனவெல்லாம் பெருங்காப்பியலக்கணங்களாகிய நாட்டுவருணனை, நகர்வருணனை, கடல்வருணனை, மலைவருணனை, உதயவருணனை, அத்தமன வருணனை, பொழில்விளையாட்டுவருணனை, புனல்விளையாட்டுவருணனை முதலிய வருணனைகளாம். வருணனைகளெல்லாந் தனித்தனி சருக்கங்களாற் கூறப்படுகின்றன. இதிலே வாராத வருணனைகளும் உளவா?

வருணனைகள் மாத்திரமா? அலங்காரசாத்திரத்திற் சொல்லப்பட்ட அலங்காரவகைகளெல்லாம் ஆங்காங்கு வருகின்றன. தமிழிலக்கியத்திலே முன்னொருகாலுங் காணப்படாத எத்தனையோ அரிய பொருளலங்காரங்களெல்லாம் வருகின்றன. சொல்லலங்காரங்களும்வருகின்றன. எத்தனைவகையான இயமகச் சுலோகங்களும் சிலேடைச்சுலோகங்களும் எண்ணில்லாதனவாய்வருகின்றன. கூடசதுர்த்தம் கோமூத்திரிமுதலிய சித்திரகவிவகைகளும் வருகின்றன. இக்காப்பியத்திலே வாராத பொருளலங்காரங்களும் இல்லை சொல்லலங் காரங்களும் இல்லை. இரசவகைகளும்இல்லை. எல்லாம்வருகின்றன என்றே யாவருங்கூறுவர்.

மற்றைக்காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்ட சரித்திரங்களும் வேதவேதாங்கவிஷயங்களும் தரிசனசாத்திரவிஷயங்களும் ஆருகதம் பௌத்தம் முதலியசமயசாத்திர விஷயங்களும் அலங்காரங்களோடு கலந்து ஆங்காங்கு வருகின்றன அங்ஙனம் வரும்விஷயங்களுள் சோதிடவிஷயங்களும் சங்கீதவிஷயங்களும் வாகடவிஷயங்களும் மிகப்பல. அவையெல்லாம் முன்னொருகாலுமறியப்படாத அரியவிஷயங்களேயாம்.

முதலாஞ்சருக்கத்திலே இந்திரப்பிரத்தத்திலே தருமபுத்திரரால்நடத்தப்படும் இராயசூயயாகத்துக்கு அழைக்கப்பட்டவராய்க் கண்ணபிரானைவர் துவாரகாபுரியில் இருக்கும்போது அவரிடத்திலே நாரதமகாமுனிவர் வந்ததும், அந்நாரதமகாமுனிவருக்கும் கண்ணபிரானுக்கும் நடந்த சம்பாஷணைகளும், தேவர்முதலியோர்க்குச் சிசுபாலன் செய்ததீங்குகளும் அந்தச்சிசுபாலனை இயமபுரத்துக்குஅதிதியாக்கியருளல் வேண்டும் என்று கண்ணபிரானை நாரதர் பிரார்த்தித்துக் கொண்டதும் பிறவும் வித்தாரமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

(வரும்.)

இங்ஙனம்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

## ஓர் நன்மொழி.

கடவுளாலேபடைக்கப்பட்ட படைப்புகளுள் மாநுடப்படைப்பு மிகமேலாகியபடைப்பாகும். அதுவும் படைப்புத் தொழில் நெடுங்காலம் நிலைநிற்கும்பொருட்டும் சந்ததிபெருகுதற்பொருட்டும் ஆண் பெண் என இருவகுப்பாகப் படைக்கப்பட்டது. கல்விஇருபாலார்க்கும் ஆவசியகம்வேண்டும். சிலர்பெண்களை ஆடுமாடுகள் போலவும் ஆவுரோஞ்சுதறிபோலவும் பாவிக்கின்றார்கள். முகத்திலே இரண்டுகண்களிருந்தபோதுஞ் சூரியன்உதயஞ்செய்யாவிடின், உலகப்பொருள்களையுள்ளபடி அறிதற்கு இயலாது. மாநுடர்சம்பாதிக்க

த்தக்கபொருள் கல்விப்பொருள் செல்வப்பொருள் எனவிருவகைப் பொருள்களுள்ளன. அவைகளுள் செல்வப்பொருளை உண்மைவழியாற் சம்பாதித்தற்கும் புண்ணியபாவங்களின் பகுப்பைப் பகுத்தறிதற்கும் இம்மை மறுமைப்பயன்களை வேறு வேறு பகுத்தறிதற்கும் நல்லபுகழைப்பெறுதற்கும் நித்தியப்பொருள் அநித்தியப்பொருள் உருவப்பொருள் அருவப்பொருள்களையுள்ளபடியறிதற்கும் பெருங்காரணமாய் விளங்குதலாற் கல்விப்பொருளே செல்வப்பொருளைக் காட்டினுஞ் சிறப்புடையதாகும். செல்வப் பொருளாவது மணி, பொன், நென் முதலியன.

உடம்பினாற் றீண்டியும் நாவினாற்சுவைத்தும் கண்ணாற்கண்டும் மூக்கினால்மணந்தும் செவியாற்கேட்டும் மனசினாற்பகுத்தும் அறிகின்ற ஆறறிவுடைய மானுடருக்குச் செல்வப்பொருள் கிடைத்தது சரீரசுகம் ஆன்மசுகம் என்னுமிரண்டின் பொருட்டென்றபுத்திபண்ணல்வேண்டும். அதாவது செல்வப்பொருளை உதவியாகக்கொண்டு உடம்பைப்பேணிவளர்த்து அவ்வுடம்பையுதவியாகக்கொண்டுகல்விப்பொருளைச் சம்பாதித்து அக்கல்வியறிவாகிய ஞானக்கண்ணாலே பதியாகிய சிவபெருமானைப் பூசித்து ஆன்மாவினது அறிவுசெயல்களை அநாதியேமூடிமறைத்த பாசத்தின் வீரியத்தைத்துடைத்துப் பரமுத்தியாகும் ஆன்மசுகத்தைப் பெற்றுய்வதற்கே செல்வப்பொருள் ஆதாரமாயுள்ளது இவ்வுண்மையறியாத ஏழைச் சனங்கள் செல்வப்பொருளாலே ஆன்மசுகத்தைச் சம்பாதியாமல் விபரீத வுணர்ச்சியினாலே மோசம்போகின்றார்கள். ஐயையோ! குருடருக்குமுன் விளக்கையேற்றி வைத்தால் யாதுசுகம்.

பாவமில்லாத வழியாற்சம்பாதித்த செல்வம் தேவபூசைக்குபயோகப்படுதலாலும் பெரியோர்களுக்குத் தானங்கொடுத்துப் பயனடைதலானும் புண்ணியத்தை வளர்க்கும். பாவபுண்ணியம் பகுத்தறியாதவன் சம்பாதித்தசெல்வம் அச்சம்பாதித்தவனுக்கும் அவன்சுற்றத்தாருக்கும் மீளாத்துக்கஞ்செய்யுமென்பதே யுண்மைநூற்றுணிபு.

அநாதிமலமுத்தசித்துருவாகுங் கடவுளுக்குப் பசிபட்டினி பிறப்புஇறப்பு மலசலம் மையல்மறதிமுதலியவுபாதிகளில்லை. ஆன்மாக்களுக்கு அவ்வுபாதிகளுள்ளனவாகும். கடவுளில்லாதவிடம் பரமாணுவளவேனுமில்லை. வைகையாற்றங்கரையிற் பாண்டியன் அடித்தபோதும் அருச்சுனர் விற்படையாலடித்தபோதும் உயிருள்ள பொருள் உயிரில்லாப்பொருள்களெல்லாஞ்சுழன்றன. ஐயையோ; அதன்கருத்து தாம் எங்கும் இரண்டறக் கலந்திருக்குமுண்மையை மாநுடரறியும்படி எடுத்துக்கொண்ட திருவிளையாடலாகும். தேவாலயங்களிலே கைமணிஅசைமணியடிக்கின்றகருத்து; அக்கிராமத்திலுள்ளவர்களுக்குக் கடவுளைச்சேவிக்கவாருங்கள் அல்லது அவனைநினையுங்களென்னுங் குறிப்பைக்காட்டுதலாகும். நித்தியபூசை முதலியவையும் கடவுளைநினைக்கச்செய்தலாம். கடவுளுக்குப் பனி மழை வெயில்பட்டுச்சுரம் தோஷம் வந்துபீடித்து இறந்துபோவரென்று ஆலயந்தாபித்ததன்று. மாநுடர் ஆலயம்போய்க் கூடி உலக கருமத்தைப் பேசாமலும் நினையாமலும் கடவுள்தந்த வேதத்தையோதி யவரதுகுணமகிமை அடியார்மகிமை பஞ்சாட்சரமகிமை விபூதிமகிமையை யெல்லாரும் அறியும்படி பாராட்டிப் பேசுதல்வேண்டும். முன்னுள்ள இராசாக்களும் பிரபுக்களுந் தேவாலயந் திருமடமுதலியவற்றிற்கு விளைநிலந்திரவியங்களைக் கொடுத்தது என்னை! அதாவது கோயிலெசமானும் பூசகரும் திருத்தொண்டு செய்கின்ற அடியார்களும் யாதொருதொழின் முயற்சிசெய்யாதவர்களாய், தமிழைப்படித்தும் படிப்பித்தும் தமிழை வளர்த்துக்கொண்டு அத்தமிழாலே சைவத்தை வளர்த்தல்வேண்டுமென்பதே அப்

பொருளைக்கொடுத்தபுண்ணியவான்களின் கருத்து. ஐயையோ! இவ்வுண்மையறியாத வேழைச்சனங்கள் சதிவிளையாட்டுவாணவிளையாட்டு முதலியவேடிக்கையின்பொருட்டும் சுற்றத்தாருடன் பகைசாதித்துப் பொய்வழக்குத்தொடுத்தல் பொய்ப்பத்திரம் பிறப்பித்தல் பிறர்குடிகெடுத்தல் முதலிய பாவத்தொழிலை வளர்த்தற் பொருட்டும், எத்தனையோ பெருந்தொகைப் பொருளைப் பாழுக் கிறைக் கின்றார்கள். இங்ஙனமாயின், தமிழுஞ் சைவமும்வளர்வது எங்ஙனம் ஐயையோ! இது ஆகமசம்மதமோ! அசம்மதமோ! அறியேம் இத்தமிழை வளர்த்தற்கு அரையணுக் காலணுவுங் கொடுத்தற்கு உடன்படுகின்றாரில்லை.

இங்ஙனம்.
யாழ்ப்பாணம் வட்டுநகர்
மகாவித்துவான்—மு. ஆறுமுகம்.

## திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி.

அக்குகைக்கணுள்ள தொளாயிரத்துத்தொண்ணூற்றென்பதின்மரதும், நல்லூழ்வந்துகைகூடப் பெறுதலினாலே, இப்பூதத்தின் கண்ணுக்கு, நக்கீரரும் எதிர்ப்பட இவரையும் அன்னோருடன் சேர்த்து ஆயிரவராக உண்ணக்கருதி, எடுத்துக் கொண்டுசென்று மலைக்குகைக்குள் வைத்துவிட்டு நீராடச்சென்றது. அப்போது அக்குகையினுள் அடைக்கப்பட்டிருந்தோர் எவரும், நக்கீரரைநோக்கி, மஹானுபாவரே இற்றைநாள்வரையும் உயிர்சுமந்திருந்தயாம், இன்று உம்மால் உயிர்துறப்ப நேர்ந்ததே, என்று பெருந்துயர்கொண்டு வருந்துவதை நோக்கிய நக்கீரர், இளையபிள்ளையாரைநோக்கித் தவங்கிடந்து, இத்திருமுருகாற்றுப்படையை அருளிச்செய்தவுடனே, அப்பிள்ளையார் திருக்கரத்துவேல்சென்று அப்பூதத்தின் உயிரைக்குடித்தது, பின்னும் நக்கீரர்பன்னாள் இருந்தவமுழந்து தமக்கு நேர்ந்தசாபத்தை முறையிட, இளையபிள்ளையார் அங்கே ஓர் தடாகத்தைக்காட்ட நக்கீரர் அதனுண்மூழ்கிச் சாபம் நீங்கப்பெற்றுத், தென்கைலையைத்தரிசித்துக்கைலைபாதி காளத்திபாதி, என்னும் அந்தாதிபாடித் திருவருள்கைகூடப் பெற்றனர் என்பர்.

சிவாஞ்ஞையினால் வந்தபூதமும் தங்நிலைநோக்கிச்சென்றது. சிவபூசையின்வழீஇய அப்பெருந்தொகையினரும் நல்லுணர்வினர்களாய்ச்சென்று அமலன்பூசையை முட்டின்றிச்செய்து மீளா அடியர்களானார்கள். இதன்விரிவை, சீகாளத்திப்புராணம் நக்கீரச்சருக்கத்தானுமுணர்க.

இச்சரித்திரத்தினையே பொதிந்து நக்கீரதேவரும் "குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர்செய்ததுவும், அன்றங்கமரரிடர் தீர்த்ததுவும்-இன்றென்னைக் கைவிடாநின்றதுவுங் கற்பொதும்பிற்காத்ததுவும், மெய்விடாவீரன்கைவேல்" எனஅருளிச்செய்தமையும் ஆராய்தற்பாலதாம்.

இனிப் பத்துப்பாட்டுள், முதலாவது பாட்டாகிய இத்திருமுருகாற்றுப்படை, வென்றிவேற்பெருமான் திருநிலையங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடைவீடுகளினும், அப்பெருமான் திருவருட் டிருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருத்தலை மிகவிதந்துபாராட்டிக் கூறுவதோடு, ஆண்டாண்டுக் கொண்டாடப்படும் தலைமையமைந்த விழாவின்கண்ணும், தம்மேல் அன்புடையார் எத்தும் இடங்களினும், வெறியாடுகளத்தினும், காட்டினும், பொழிலினும், ஆற்றிடைக்குறையினும், குளனினும், முச்சந்தி நாற்சந்தி ஐஞ்சந்திகளினும், கடம்பினும் மன்றத்தினும், பொதியினும், ஆதீண்டுகுற்றியினும் இன்னனபிறவற்றினும், சுப்

பிரமணியப்பெருமான், ஆன்மாக்கள் உய்கைகாரணமாக எழுந்தருளியிருக்கும் சர்வவியாபகத்துவத்தையும் ஒருவாறுவிளக்கிச்செல்லுகின்றது. இதனைமேல் விளங்கவைக்குங்கால், தெள்ளிதி னுணர்ந்துகொள்க.

திருப்பரங்குன்றம், இந்தஸ்தலம் மதுரைக்குக் குடபாலினுள்ளது. மதுரைக்குத்தெற்கே உள்ளது என வித்வான் ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் செய்த அபிதானகோசத்திற் காணப்படுகின்றது. திருச்சீரலைவாய், இந்தஸ்தலம், உலகம் அறிந்து ஏத்தும் பெருங்கீர்த்தியையுடைய பாண்டிநாட்டிலே சமுத்திரதீரத்துள்ளது. திருச்செந்தூர் என வழங்கப்படுவதும் இதுவே. நாமனூரலைவாய் என மற்றொருதிருநாமமுமுண்டு.

திருவாவினன்குடி, திரு ஆ, இனன், மூவரும் பூசித்ததலம். இந்தஸ்தலம்பாண்டிநாட்டில்உள்ளது. சோழநாட்டில் என ஒருசாரார்கூறுவர். இனி இத்திருவாவினன்குடிக்குச் சித்தன்வாழ்வுஎன மற்றொரு திருநாமமுளதென்றும் அதனையே ஔவையாரும், "நல்லம்பர் நல்லகுடியுடைத்துச் சித்தன்வாழ்-வில்லந்தொறு மூன்றெரியுடைத்து-நல்லரவப் —பாட்டுடைத்துச் சோமன் வழிவந்தபாண்டியநின், நாட்டுடைத்துநல்ல தமிழ்" எனப்பாடியுள்ளாரென்றும், சித்தன்என்பது பிள்ளையார் ஆயிரந்திருநாமத்துள் ஒன்றென்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். பழனி என்பதும் இதனையே.

திருவேரகம், இந்தஸ்தலம் திருக்குடந்தைமாநகர்க் கணித்தாயுள்ளது, சுவாமிமலை எனவும் வழங்கும்.

குன்றுதோறாடல் இந்தஸ்தலம் குன்றக்குடி எனவும், மயூரகிரிஎனவும் வழங்கப்படுகின்றது. குன்றுதோறாடலைப் பன்மைபடக்கூறுவர் ஒருசாரார். பழமுதிர்சோலை இந்தஸ்தலம் யாதெனத்தெரிந்திலது, அழகர்கோயில் என்பாருமுளர், வேறுபலவாகக் கூறுவாரும் சிலர்உளர், தாமுணர்ந்தனவற்றை உலகம் அறியக்கூறுதல் இறைவனுணையாதலின் சான்றோர் இன்னோரன்ன சந்தேகங்களை நீக்குவார்கள் என்பது ஒருதலை.

"திருமுருகாற்றுப்படை" என்னுந் தொடர்மொழிக்கணுள்ள திரு என்பது. திருக்கோயில், திருக்குளம், என்றாற்போல்வதோர் திருவருட் சத்தி பதிதலைக்குறிப்பானுணர்த்தும்தெய்வவான்மொழியாம். முருகு என்பது இளமையைக்குறிக்கும் ஓர் பண்புச்சொல்; அதுஈண்டுஅவ்விளமையை என்றும் தம்பாற்கொண்டு விளங்கும் முருகனுக்காயிற்று. ஆற்றுப்படை என்பது வழிப்படுத்தல்என்றாயிற்று. ஆண்டை ஐ, வினைமுதல்விகுதி. முருகாற்றுப்படை என்றதற்கு வீடுபெறுதற்குச்சமைந்தான் ஓரிரவலனை வீடுபெற்றான்ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததென்று பொருள்கூறுகஎன்பது நச்சினார்க்கினியார்உரை. ஆற்றுப்படை அகவற்பாவால், விறலி, பாணர், கூத்தர், பொருநர், இந்நால்வருள் ஒருவா பரிசிற்குப் போவாரைப்பரிசு பெற்றுவருவா ராற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியுங்கொடையும் கொற்றமுஞ்சொல்வது. "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு-மாற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப்-பெற்றபெருவளம் பெறாஅர்க்கறிவுறீ இச்-சென்றுபயனெதிரச் சொன்னபக்கமும்" என்பதனான் முற்கூறிய கந்தழியைப்பெற்றான் ஒருவன் அதனைப்பெறாதான் ஒருவனுக்குப்பெறுமாறுகூறி அவனைவழிப்படுத்துக்கூறுவான் என்பதுபற்றிச் செய்யுள் செய்தாராயிற்று.

(தொடரும்)

இங்ஙனம்.

அ. க. வைத்தியலிங்க உபாத்தியாயன்

சைவகலாசாலை, இணுவில்.

உ

சிவமயம்.

# தமிழ்மொழி.

(கசக-ம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ்மக்களின் ஏற்றம்—பண்டைக்காலத்திலிருந்த தமிழ்மக்களின் நாகரீகநிலை மிகவும் வியக்கத்தக்கது. இவர்சனங்களின் அபிவிருத்திக்கும் நாகரீகத்திற்கும் இன்றியமையாததாகிய பலவகைத்தொழிலாளிகளையும் உடையராயிருந்தனர். துறைமுகப் பட்டணங்களில் காணப்படும் கலங்கரைவிளக்கமும் (*Light House*) அவ்விடங்களில் நடைபெறும் ஏற்றமதி இறக்குமதிப் பண்டங்கட்கு அரசஇலைச்சினை இடுதலும் சுங்கங் (*Customs duty*) கோடலும் கால்நடையாய் ஒருநாட்டினின்றும் மற்றொருநாட்டிற்குக் கொண்டு செல்லும் பொதிப்பண்டங்கட்கு ஆயம் (*Toll*) கோடலும் பூர்வகாலத்துவழக்கமே. அதிகாரம் செலுத்துமுறையில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள் என்பது இக்காலத்தே ஆங்கிலஅரசாட்சியில் குடிகள் இடம்பெற்றிருப்பதேபோல் (*House of Commons*) பண்டைக்காலத்தும் உண்மை நன்குவிளங்கும். அரசர்கட்கு மெய்காப்பாளர்களும் (*Body guards*) உண்டு. அழியாப்புகழைநாடி உயிரைத்துரும்பென மதிக்கும் சுத்தவீரர்களும் தமிழர்க்குள் புதியரல்லர். பொதுஜனநன்மையைக்குறித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் வைத்தியசாலையுங் (*Hospitals*) ஆதிகாலத்ததேயாம். மற்றும் இயந்திரங்களும் உண்டு. இன்னும் நாகரீகத்தின் ஏற்றத்தைக்குறிக்கும் எல்லா அறிகுறிகளும் அநேகம் உளவெனினும் விரிவஞ்சிக்கூறாது விடுத்தாம். மேற்கூறியவைகட்கெல்லாம் பண்டைநூலின்கண் ஆதாரம் காணப்படுமோ எனிற் காட்டுதும்.

(1) கைத்தொழிலாளிகள்.

"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ்சாந்தமும்
பூவும்புகையும்மேவியவிரையும்
பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்
கட்டுநுண்விணைக்காருகர் இருக்கையும்
ஆரமும் அகிலுந்தூசுந்துகிரும்
மாசறுமுத்தும் மணியும்பொன்னும் (றியா
அருங்கலவெறுக்கையொ டளந்துகடைய
வளந்தலைமயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகைதெரிந்தபகுதிப்பண்டமொடு
கூலங்குவித்த கூலவீதியும்
காழியர் கூவியர் கண்ணொடையாட்டியர்
மீன்விலைப்பரதவர் வெள்ளுப்புப்பகருநர்
பாசவர் வாசவர் பன்னிணவிலைஞரொடு
ஓசுநர்செறிந்தஊன்மலியிருக்கையும்
கஞ்சகாரரும்செம்புசெய்குநரும்
மரங்கொலதச்சரும்கருங்கைக்கொல்லரும்
கண்ணுள்விணைஞருமண்ணீட்டாளரும்
பொன்செய்கொல்லரு நன்கலந்தருநரும்
துன்னகாரருந தோலின்றுன்னரும் (கிப்
கிழியினுங்கடையினுங்தொழில்பலபெருக்
பழுதில்செய்விணைப்பால்கெழுமாக்களும்"

மேற்காட்டிய சிலப்பதிகாரக்கூற்றாற் கைத்தொழிலால் வேறுபட்ட தொழிலாளிகள்பலர் பண்டைக்காலத்தரே என்பது பெறப்படும்.

(2) கலங்கரைவிளக்கமிருந்தமை.

"தொடைநவின்மகடூஉக்கடைகெழு
விளக்கும்
இடையிடைமீன்விலைபகர்வோர்விளக்கமும்
இலங்குநீர்வரைப்பிற்கலங்கரைவிளக்கமும்"
என்பதனால்விளங்குகின்றது
சிலப்பதிகாரம்.

(3) ஏற்றமதி இறக்குமதிப் பண்டங்கட்கு.
இலைச்சினையிடுதலும் சுங்கங்கோடலும்.

"வாலிணர் மடற்றாழை
வேலாழி வியன்றெருவின்

நல்லிறைவன்பொருள்காக்கும்
தொல்லிசைத்தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்டமாஅபோல
வைகறொறு மசைவின்றி
யுர்குசெயக் குறைபடாது
வான்முகந்த நீர் மலைப்பொழியவு
மலைப்பொழிந்த நீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவு
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினேன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி.."

என்பதனால்விளங்கும்.

பட்டினப்பாலை

(4)கால்நடையாய்ச் சேல்லும் பண்டங்கட்கு வழியிலாயங்கோடலுண்மை.

"புணர்ப்பொறை தாங்கியவடுவாழ் நோன் புறத், தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும், உல்குடைப் பெருவழிக்கவலை காக்கும். என்பது அறிவிக்கும்
பெரும்பாணாற்றுப்படை

(5) அரசரவைக்களத்தில் ஜனங்கள் இடம்பெற்றமையும் அரசர் மெய்காப்பாளரை யடைந்திருந்தமையும்—

"ஐம்பெருங்குழுவு் எண்பேராயமும்
அரசகுமரரும் பரதகுமரரும்
கவர்பரிப்புரவியர் களிற்றின்றொருதியர்
இவர்பரித்தேரின ரிபைங்தொருங்கீண்டி"

என்னுஞ் சிலப்பதிகாரச்செய்யுளுரையின் அரும்பதவுரையாசிரியர் மேற்கோளாகக்காட்டிய.

"சாந்துபூக்கச்சாடைபாக்கிலைகஞ்சுகநெய் ஆய்ந்தஇவர்எண்மார்ஆயத்தோர்—வேந்தர்க்கு, மாசனம்பார்ப்பார் மருத்தர் வாழ் நிமித்த ரோடமைச்சர், ஆசில் அவைக் களத்தாரைந்து."

என்னுஞ் செய்யுள்விளக்கும்.

எண்பேராயம்—(1) வாசம் கொடுப்போர் (2) மாலைதொடுப்போர் (3) கவசமிடுவோர் (4) உடைஉடுப்போர் (5) அடைகாய் நல்குவோர் (6) வெற்றிலைகொடுப்போர் (7) மெய்காப்பாளர் (8) விளக்குத் தூக்குவோர் ஆகிய இவர்களாம்.

ஐம்பெருங்குழு---(1) மாசனம் (பொதுஜனப்பிரதிநிதிகள் (2) பார்ப்பார் (அறிவர்) (3) மருத்தர் (ஆயுள்வேதங்கற்ற மருத்துவர்) (4) நிமித்தர் (சகுனங்கூறுவோர்) (5) அமைச்சர் (மந்திரிகள்) ஆகியஇவர்களாம்.

(6)வீரர்கள்—போர்க்குச்சென்றதன் மகன் படைக்கு வலியழிந்து புறங்கொடுத்தோடினன் என்றுபலர் கூறக்கேட்ட ஒருத்தி அவ்வாறு போருக்கு உடைந்தனன் ஆயின்! அவன்! பாலுண்டு வளர்ந்ததற்குக் காரணமான என்முலைகளை அறுத்தெறிவேன் என்றுவாளைக் கைக்கொண்டு படுகளம்புகுந்துதேடி இருதுணிபட்டுக்கிடந்த மகனுடலங்கண்டு அவனை ஈன்றஞான்றினும் பெரிதுவந்தாள் எனின்தமிழர்வீரத்தை என்னென்றுரைப்பது:
இதனை.

"நரம்பெழுந்துலறியநிரம்பாமென்றோள்
முளரிமருங்கின்முதியோள்சிறுவன்
படையழிந்துமாறினன்என்றுபலர்கூற
மண்டமர்க்குடைந்தனனாயின்உண்டஎன்
முலையறுத்திடுவன்யானெனச்சினைஇக்
கொண்டவாளொடுபடுபிணம்பெயராச்
செங்களந்துழவுவோன்சிதைந்துவேறாகிய
படுமகன்கிடக்கைகாணூஉ
ஈன்றஞான்றினும்பெரிதுவந்தனளே"

என்னும்புறநானூறுவிளக்கும்

(7) வைத்தியசாலைகள்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று, அப்பால்நாற் கூற்றேமருந்து."

என்னுங்குறள்விளக்கும்

(1) உற்றவன்—நோயாளி (*Patient*) (2) தீர்ப்பான்மருத்துவன் (*Doctor*) (3) மருந்து—கருவியாகிய மருந்து (*Medicine*) (4) உழைச்செல்வான்—மருந்தைப் பிழையாமல் இயற்றுவோன் (*Compounder*).

(8) இயந்திரமிருந்தமை

"பல்கிழி யும்பயி னும்துகில் நூலோடு
நல்லரக் கும்மெழுகும் நலஞ் சான்றன
வல்லன வும்அமைத் தாங்கெழு நாளினுள்
செல்வதோர் மாமயில் செய்தனனன்றே."

என்பதனாலறியலாம். சீவகசிந்தாமணி

தமிழும் சைவசமயமும்.—எம்மொழியினும் இனிய தமிழ் மொழியானது சைவ சமயத்து முழுமுதற் கடவுளாம் சிவபெருமானாலே மிகுதியும் விரும்பப் பெறுவது. இம்மொழி தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களினும் நன்காராயப்பட்டது. தலைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் எனின் தமிழர்க்கு இதனினும் ஏற்றம் வேண்டுமோ? "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாயமைந்தனோ டெண்வகையாயமைந்து நின்றான்" என்று ஆன்றோர் சிறப்பித்துக் கூறும் சிவபரஞ்சுடரும், எழுபெரும் புவன முழுதொருங்கின்ற உமையம்மையும், முருகவேளும் முறையே சோமசுந்தர பாண்டியன், தடாதகைப் பிராட்டியார், உக்கிர குமரனாக அவதரித்தமை தமிழ் காரணமாக என்னின் யாம் பகர்வது யாது? இதனைக்குமரகுருபர சுவாமிகளும்.

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள் தடாதகாதேவி யென்றொருபேர்—தரிக்கவந்ததும் தனிமுதலொருநீ சவுந்தர மாறனானதுவும், குமரவேள் வழுதியுக்கிரனெனப்பேர் கொண்டதும் தண்டமிழ்மதுரங்—கூட்டுணவெழுந்த வேட்கையாலெனிலிக் கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்"

என்று கூறியுள்ளார்.

தமிழ்ச்சைவ சமயாசாரியர்களாய் விளங்கும் நால்வர்கள் தமிழில் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களின் மீது எல்லாம் வல்ல இறைவனும் சோமசுந்தரப் பெருமானுக்குளதாம் விருப்பம் இவ்வளவென்றியம்ப வல்லேம் அல்லேம். ஞான சம்பந்தப்பெருமான் காரைக்காலம்மையார் திருத்தலையாலே நடந்த திருப்பதியாம் திருவாலங்காட்டினுள் பிரவேசித்தற்கஞ்சி அப்பதிக்கு வெளியே தங்கியிருந்தபோது

"மாலையிடை யாமத்துப் பள்ளி கொள்ளும்
மறையவனார் தம்முன்பு கனவி லேவந்
தாலவனத் தமர்ந்தருளு மப்பர் நம்மை
யயர்த்தனையோ பாடுதற்கென் றருளிச் செய்ய
ஞாலமிரு ணீங்கவரும் புகலி வேந்தர்
நடுவிடையா மத்தினிடைத் தொழுதுணர்ந்து
வேலைவிட முண்டவர்தங் கருணை போற்றி
மெய்யுருகித் திருப்பதிகம் விளம்ப லுற்றார்."

என்றபடி தாமே வலியப்போந்து பாடலை ஏற்றதும்,

நேசநிறைந்த உள்ளத்தால்
நீலநிறைந்த மணிகண்டத்
தீசனடியார் பெருமையினை
எல்லா வுயிரும் தொழவெடுத்துத்
தேசமுய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளராம்.

சுந்தரமூர்த்தி நாயனாரை வலிய ஆண்டவள்ளல் அவரை நோக்கி

"மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டனென்னுநாமம், பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அர்ச்சனை பாட்டேயாகு மாதலால் மண்மேனம்மைச், சொற்றமிழ்பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்."

என்று தமிழ்மாலை சாத்தக் கட்டளையிட்டதும்,

திருமுதுகுன்றில் ஆரூரருக்குக் கொடுத்த பொன்னை அவர் மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில எம்பெருமான் அநுஞ்ஞைப்படிதேடியபோது,

"நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட்டினின்று, மாற்றறுசெம் பொன்குளத்து வருவியாதொழிந்தருள"

எனப் பாட்டுக்காக முதலில் பொன் காட்டாதொழிந்ததும்,

மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறையில் குருந்த மூலத்தில் ஆண்ட பெருந்தகை

"தித்திக்கும் மணிவார்த்தை இன்னஞ் சின்னுட்
டிருச்செவியிலிருத்தவுங்கைச்செம்பொனெல்லா
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபொண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தைவாது
முடித்திடவுந் திருவுள்ள முன்ன மெய்தி
எத்தித்தொண் டுரைக்கருமஞ் சிறிதுண்டிங்கே
யிருத்தியென உருக்கரந்து."

சென்றதுமாகிய இவையெல்லாம் ஏகநாயகராம் சிவபெருமான் தமிழ்மொழியின்மீது வைத்துள்ள விருப்பத்தாலன்றோ? இன்னும் தமிழ் காரணமாக எம்பெருமான் செய்த திருவிளையாடல்களையறியாதார் யாவர்? இவைகளால் தமிழிற்கும் சைவசமயத்திற்கும் உள்ள ஒற்றுமை வெள்ளிடைமலைபோல் விளக்கமுறுகின்ற தன்றோ

முடிவுரை — இத்தகைய தமிழ்மொழியைத் தமிழ்நாட்டு மூவேந்தரும் பண்டைக்காலத்தில் பாராட்டி வந்தனர் என்பதை மேலே காட்டினும். மூவேந்தருள்ளும் இம்மொழியின் மேன்மையைப்பெரிதும் பாராட்டினோர் பாண்டியரே யாவர். இதனை மூன்று சங்கங்கள் அவர்நாட்டில் தங்கினமையே வலியுறுத்தும். இதுவுமன்றி

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும்
 என்சிந்தை யுள்ளும்
உறைவானுயர்மதிற கூடலினுய்ந்த வொண்
 டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றியேழி
 சைச்சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலா
 ம்புகுந்தெய் தியதே.

என்பதும் எடுத்துக்காட்டும். இத்தகைய தமிழ்மொழியானது முச்சங்கங்களும் அழிந்தபிறகு ஆதரிப்பாரின்றிச்சீர்குலைந்து நிற்பதையோர்ந்து நாம் செய்த தவப்பயனுகி இன்று சபாநாயகம் வகித்திருக்கும் ஸ்ரீமான்-பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் தமிழ்ச் சங்கம் நாட்டி உலகிற்குச்செய்துவரும் பெருநன்மையை அறியாதார்யாவர். அவரும் அச்சங்கமும் இன்று நாம் ஒன்றுகூடிப் பேசிக்களித்ததற்குக் காரணமாய சைவசமயாபிவிர்த்திசபையும் பல்லூழிகாலம் வாழ எம்பெருமான் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்.

சே. சிவஞானம்பிள்ளை.

---

மங்கையர்க்கரசி என்னும்

# கமலாம்பிகை சரித்திரம்.

(கஉகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

இராசகுமாரனுகிய கருணாகரனனவன் கடிதத்தை வாசித்து யோசித்து அவள் புத்திக்கு வியந்து தன்மாமனுயிருந்து பகைசாதித்திருக்கும் வீரவிக்கிரமன்மீது கோபங்கொண்டு, மனம் ஊசலாடப் பெற்றவனுய் என்னை ஆச்சரியம்! என்உயிரனைய பெண்மணியானவள் தனக்குப் பேராபத்து வந்துவிட்டதாகக் குறிப்பித்திருக்கின்றனள். இவள்கல்வி அறிவின் மேம்பாடு சொல்லும் தகுதியுடைத்தோ? நான் காலதாமசம் செய்வது நீதியன்று. அவளை விவாகஞ்செய்துஅவளது இன்பநலத்தை அனுபவிக்க வேண்டிய வனுயிருந்

தும் கேவலம் பெண்பாலாகிய ஒரு கன்னிகை அதிலும் இராசகுடும்பத்தைச் சேர்ந்தவள் அல்லாமலும் எனது பாலியநேசியும் பள்ளித்தோழியுமாகவிருக்கின்றாள் ஆகையினால் நான்போய் அவளுடைய துயரத்தை நீக்குதலே முறை என்று யோசித்து அவள்மீதுகொண்ட அன்பு நேசத்தினால் தன்னுடைய தாய் தந்தை குரு சிநேகர் உற்றார் முதலிய ஒருவருக்கும் தனதுபிரயாணத்தைப்பற்றிக் கூறாது அசுவசாலையை அடைந்து நெடுந்தூரம் பிரயாணம்செய்யக்கூடியஒரு அசுவத்தைத் தெரிந்தெடுத்து அதன்மீதிவர்ந்து காடு மலை முதலியவெல்லாங்கடந்து பக்ஷித்தடாகத்தை அடைந்து அத்தர், புனுகு, சவ்வாது, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை முதலியவைகளை விற்கும் ஓர் வியாபாரி வேடங்கொண்டு அங்குள்ள ஓர் சத்திரத்தில் தங்கியிருந்தனன்.

இராசகுமாரனுக்குக் கடிதம்கொண்டு சென்ற சுமுகனானவன் அவனிடத்தே உத்தரவு பெற்றுக்கொண்டு முன்னரே வந்துவிட்டான் ஆகையினால் தற்செயலாக அவனைக்கண்ட காஞ்சனமாலை விரைவாக அவனைப்பார்த்து அடே! சுமுகா இராசகுமாரனுக்குக் கடிதங்கொண்டுசென்றாயே அவர் வந்துவிட்டனரா?

சுமுகன்:—அம்மா! எனது மைத்துனருடைய அண்ணன் பாட்டனாரின் மூத்தகுமாரருக்கு மாமனாருடைய தகப்பனாருக்குத் தம்பியின் பேரப்பிள்ளையுடைய பெண்சாதியின் தாயாருடைய மாமியாருக்குத் தங்கையின் நாத்திக்கு அக்காள் பாட்டியினுடைய பந்துக்களுக்கு ஒருவேளை யாருக்காவது தெரியும்.

காஞ்சனமாலை:—அடே மடையா எப்பொழுதுதான் இந்தவிளையாட்டை விடுவாய் எதற்கும் காலமில்லையா? உண்மைசொல்லு நீ இளவரசரைக் கண்டாயா?

சுமுகன்:—ஏனம்மா இப்படிக்கேட்கின்றீர்கள்? அரிச்சந்திரன்வாயில் ஒருபொய்வருமா என் வாயில் ஒருமெய்வருமா அந்தமட்டும் இளவரசர் சங்கதியை ஒருவருடனும் கூறாமல் தப்பித்துக்கொண்டேனே (காஞ்சனமாலை கோபத்தோடு போய்விடப்) புஷ்பகாந்தி என்னும்பாங்கி விரைவாக வந்து கேட்கின்றாள்

புஷ்பகாந்தி:—சுமுகா இளவரசர் எங்கேஎங்கள் தலைவியார் கேட்டுவரும்படி பணித்தருளினார்.

சுமுகன்:—ஏது மிக்க அவசரமாயிருக்கின்றது. அம்மா தாங்கள் ஆத்திசூடிபடித்திருக்கின்றீர்களா?

புஷ்பகாந்தி:—அடே! அதெல்லாம் என்னத்திற்கு இளவரசர் எங்கே? வந்துவிட்டாரா? அல்லது மறுமொழிகொடுத்தாரா? சீக்கிரஞ்சொல்லு எனக்கு அவசரமாகவிருக்கின்றது.

சுமுகன்:—எனக்கு அவசியமில்லை நான் இப்படியெல்லாம் சொல்லமாட்டேன்.

புஷ்பகாந்தி:—(சாந்தமாய்க் கேட்டாற்சொல்லுவானென நினைந்து' அடே உனக்கு இன்றைக்கு ஏராளமாக இனியபோசனம் தருவிக்கின்றேன் இளவரசர் வந்துவிட்டாரா? சீக்கிரம் சொல்லு.

சுமுகன்:—அம்மா பயப்படவேண்டாம் இப்படி உட்காருங்கள் சொல்லுகிறேன்.

புஷ்பகாந்தி:—இதோ உட்காருகின்றேன் சீக்கிரம் சொல்லு.

சுமுகன்:—அம்மா! ஆத்திசூடி படித்திருக்கின்றீர்களா?

புஷ்பகாந்தி:—ஆமாம் படித்திருக்கின்றேன்

சுமுகன்:—அதில் "அறஞ்செயவிரும்பு"என்றதற்குப்பிறகு "அவசரப்படேல்" என்றிருக்கின்றதே தெரியுமா? அது.

புஷ்பகாந்தி:—இப்படிவிளையாடுதற் காகவா உட்காரச்சொன்னாய்.

சுமுகன்:—அதைப்படித்திருந்தால் இப்படிச் செய்யமாட்டீர்கள். அவசரப்படேல் உட்காருங்கள் என்ன சமாசாரம்.

புஷ்பகாந்தி:—துட்டா! என்னவிளையாடுகின்றாய் நீ இளவரசரைக்கண்டு அழைத்துவந்திருக்கின்றாயோவென அறிந்துவரும்படி எமது தலைவி கட்டளையிட்டனர், இப்பொழுதாவது சீக்கிரம் சொல்லு இளவரசர்வந்துவிட்டாரா? அவர் எங்கே இருக்கின்றார்?

சுமுகன்:—அம்மா! முன்பே சொல்லியிருக்கலாகாதா? எழுந்திருங்கள் சொல்லுகிறேன் இப்படியே நேராகப்போய் வலதுபக்கம் திரும்பி நேராகச் சென்றால் மூன்று வாயில்கள் இருக்கும் அதின் நடுவாயில் வழியாக நுழையும் அந்த

வாயிலில் தலையை இடித்துக்கொள்ளக்கூடாது தாங்கள் தெரியுமா?

புஷபகாந்தி:—இல்லை இல்லைச் சொல்லு.

சுமுகன்:—தலையை இடித்துக்கொள்ளாமல் உள்ளே சென்றால் இடதுபக்கமாக ஒருமார்க்கம் போகின்றது.

புஷபகாந்தி:—அடேமுட்டாட்பயலே இதெல்லாம் யார்கேட்டது. இளவரசர் எங்கிருக்கின்றார் சொல்லு.

சுமுகன்:—முன்பே சொன்னேனம்மா "அவசரப்படேல்" என்று அந்தஇடத்துக்குப்போகிறவழியாகச் சென்றால் மேல்மாடிக்குச் செல்லும்படியொன்றிருக்கின்றது, அப் படிமீதேறித் தெற்கு முகமாகநின்றுகொண்டு வடக்கேபார்த்தால் மூன்று மண்டபங்கள்தெரியும், நடுவே இருக்கும் சித்திரமண்டபத்தில் இளவரசர்.

பு—தி. அடேயப்பா இதைமுன்னரேயே சொல்லலாகாதா அவர் உன்னோடுவந்து சித்திர மண்டபத்திலா இருக்கின்றார் (அவசரத்துடன் எழுந்திருக்கின்றாள்)

சுமுகன்:—ஆம் சித்திரமண்டபத்தில்இல்லை.

பு—தி. இல்லையா என்னடாதுஷடா பரிகாசம் செய்கின்றாய்.

சுமுகன்:-'அவசரப்படேல்'என்று முன்னரே கூறினேனே யார் அவசரப்படச் சொன்னது அம்மா உங்களை?

பு—தி. அங்கே இல்லாவிட்டால் இந்த வீண்வார்த்தைகளெல்லாம் யாரடா சொல்லச்சொன்னது.

சுமுகன்:—உங்களையார் அவசரப்படச் சொன்னது அங்கு இல்லை அங்குபோகவேண்டாமென்று சொல்லவந்தேன் உங்களுக்கு அவசரமாகவிருந்தால் போங்களம்மா.

பு—தி. இல்லையடா இல்லை சீக்கிரம்சொல்லு.

சுமுகன்:—அந்தச் சித்திரமண்டபத்துக்குச் செல்லாமல் உமது மூக்குக்கு நேராகச் சென்றால் அதற்கு இடதுபுறம் ஒருவழியிருக்கின்றது அந்த வழியிற் போகும்போது கிழக்கேபார்த்துக்கொண்டு மேற்புறம் சென்றால் உமது தலை திடீ என்று ஒரு சுவரில் முட்டும்

பு--தி. அடேதலையைஉடைக்கவா வழிகேட்டேன்

சுமுகன்--'அவசரப்படேல்' அப்படிச் சென்றால் உமது மிருதுவானதலை உடையும், ஆகையால் அப்படிப்போகாது கிழக்கேநோக்கிக் கிழக்கே செல்லும் என்றல்லவோ சொல்லவந்தேன் 'அவசரப்படேல்'.

பு-தி. இதுநல்லது அவசரப்படுதல் நேரமாகின்றது இப்பொழுதாவது சொல்லு

சுமுகன்:--என்ன அவசரமாகவிருக்கின்றது? ஆனால் உமக்கு நீந்தத்தெரியுமா? சீக்கிரம் சொல்லுங்கள்.

பு--தி. அடே மடையா! அவசரமென்றால் உனக்குத்தெரிகிறதில்லையா?

சுமுகன்--ஆனால் அவசரமாக அந்த மேன்மாடியிலிருந்து தெற்குப்படிவழியாகக் கீழே இறங்கிக் கண்ணைமூடிக்கொண்டு அவசரமாக நேரேயோடினால் அங்கிருக்கும் பாழ்ங்கிணற்றில் வீழ்ந்து நீந்தலாம் அவசரமாக.

பு-தி. அடே! மூர்க்கப்பயலே இனிமேல் எனக்குக் கோபம்வரும் அப்புறம் உன்னிடம் விளையாடவாவந்தேன்?

சுமுகன்:---நான் அப்பொழுதுசொன்னேனே 'அவசரப்படேலென்று'.

பு-தி. அடே! கடைசிமுறையாகவே கேட்கின்றேன் சொல்லுகின்றாயா என்ன?

சுமுகன்:--நான் உமக்குக் கடைசிமுறையாகவே சொல்லுகிறேன் 'அவசரப்படேல்' இதோ சொல்லுகிறேன் அம்மாகேளுங்கள் அந்தக்கிணற்றருகிற்போகாமல் மேற்குப்பக்கமாகத்திரும்பி நேராகவாசனைபிடித்துக்கொண்டு மடைப்பள்ளிக்குச் சென்றால் அங்கே இருக்கின்றாரம்மா.

பு--தி. அப்பாடா இளவரசரா?

சுமுகன்:--இல்லை எங்களண்ணா.

பு--தி. உனது அண்ணாவா இத்தனைநாழிகைபேசியதெல்லாம் உனது அண்ணா இருக்கும் இடம்தெரிந்து கொள்ளவா?

சுமுகன்:---அவசரப்படவேண்டாம் அம்மா எனக்கு இளவரசர் அண்ணா ஜோசியர்! அவர் இருக்கும் இடம் சென்று கேட்டால் ஜோசியம் பார்த்து இளவரசர் இப்பொழுது எங்கிருக்கிறார் எனக் கண்டறிந்து சொல்லுவார் ஏதாவது தக்ஷிணை எடுத்துக்கொண்டுபோம் 'அவசரப்படேல்'.

புஷ்பகாந்தி. சகித்தற்கரிய கோபங்கொண்டு அடே மடையா துஷ்டா இராசகுமாரியிடம் சொல்லித் தக்கதண்டனைசெய்விக்கின்றேன் இளவரசர் எங்கிருக்கின்றார் சீக்கிரம்சொல்லு இல்லாவிட்டால் "மிருதாமகத்துவப்பேயது சவுக்கடிவிழும்போது தீரும்" என்றபடி சவுக்கடிதந்தாலல்லாமல் உண்மைசொல்லமாட்டாய் என்று சொல்லிச் சவுக்கைக் கையில்எடுத்தனள்.

இதுகாறும் பரிகாசமாக வார்த்தையாடிக்கொண்டிருந்த சுமுகனானவன் புஷ்பகாந்தி சவுக்கை எடுத்ததைக் கண்டு திடுக்கிட்டு அம்மா! தாயே நான் இதுவரை பேசியவைகளை யெல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். கருணாகரன் என்னும் இளவரசர்சமதுபட்டினத்துள்ள சத்திரத்தில் மாறுவேடங்கொண்டிருக்கின்றனர் இதை எமது இராசகுமாரிக்கு அறிவியுங்கள் இது சத்தியம்! சத்தியம்!! என்று கூறி அவளிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு தன்வீடுபோயினான்.

புஷ்பகாந்தி. என்னும் சேடியானவள் ஆனந்த சாகரத்தில் மூழ்கினவளாய். விரைவாக அரண்மனைசென்று அங்குதுக்கத்தோடு சயனித்திருக்கும் கமலாம்பிகையைக்கண்டு சகல சம்பவங்களையும் அவளுக்குக் கூறினாள். பிறவிக்குருடன் கண்பெற்றாலொப்ப இவைகளைக்கேட்ட கமலாம்பிகையானவள் பெருமகிழ்ச்சியடைந்து இளவரசரை எப்போ காணலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தனள்.

## எட்டாம் அத்தியாயம்.

மற்றைநாள் கமலாம்பிகையானவள் பாங்கியர் சூழ:—

"..... ...மின்குழாம்போற், றுதியருஞ் சேடியரும் தற்சூழச்சிலைமதனன் தனிசேவிக்கச், சோதியரிச்சிலம் பரற்றத்தணை நெடுங்கண்சேவியளப்பத் தோடித்தோள்வீசி, யாதியரவிந்தையென நிருபன்மகள் விளையாடற்காங்குவந்தாள்".

என்றபடி நந்தவனத்துக்குவந்து ஆண்டுள்ள விநோதங்களைப்பார்த்து உயிர்த்தோழியாகிய புஷ்பகாந்திக்குக் கூறுகின்றாள்.

(வரும்.)

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

# தாயுமானசுவாமிகள்.

சிவஞானச் செல்வராகிய தாயுமானசுவாமிகளது பத்திரசம்பெருகும் அத்தியற்புதத் திருப்பாக்கள் இக்காலத்திலே சைவசமயிகளுட்பெரும்பாலாரால்இனிது ஓதப்படுகின்றன. ஆகலின் சுவாமிகள் எக்காலத்தில் எப்பதியில் அவதரித்துள்ளார் என்பதையும், அம்மகானைப் புத்திரசிகாமணியாகப்பெறும் பாக்கியம் படைத்ததாய்தந்தையர் யாவர் என்பதையும், சுவாமிகளது இளமைப்பருவம், இராசாங்கவுத்தியோகத்தில் அமர்ந்தமை, மௌனகுருவையடைந்து ஞானோபதேசம் பெற்றுத் துறவுபூண்டமை, திருப்பாடல்களாகிய தேன்மாரியைப் பொழிந்தமை, தலயாத்திரைசெய்தமை, முதலியவற்றைப் பற்றியும் அவரது திருப்பாடல்களின் அருமை பெருமைகளைப்பற்றியும் சிலவற்றை எம்மனோர்க்குப் பயன்படும்வண்ணம் பலஅதாக்களை ஆதாரமாகக்கொண்டு இவ்வரியபத்திரிகைவாயிலாக எமது சிற்றறிவிற்கெட்டியபடி ஒருவாறு தொகுத்துக்கூறமுயன்றும்.

சோழநாட்டிலே வேதாரணியத்திலே முன்பின் ௨௩௫ வருஷங்களுக்கு முன்னரே வேளாளர்குலத்திலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த கேடிலியப்பபிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர்தாம் வசிக்குங்கிராமத்திலுள்ள ஓர்சிவன்கோயிற்றருமவிசாரணைத் தொழிலில் அமர்ந்திருந்தார். அப்பொழுது விஜயநகரராச்சியத்தின் பிரதிநிதியாகி மதுரைமுதலிய தென்னாடுகளைப் பரிபாலித்த திருமலைநாயகனுக்குப்பௌத்திரராய், திரிசிரபுரத்திலேயிருந்து சோழநாட்டையும் பாண்டிநாட்டையும் (கிறீஸ்துவுக்குப்பின்னர்)௧௭௦௪ம் ௵ முதல். ௧௭௩௧ம் ௵ வரையில் அரசுசெய்த விஜயரங்க சொக்கநாத நாயகர் என்பவர் கேடிலியப்பபிள்ளையின் குணாதிசயங்களைக் கேள்வியுற்று அவரை வரவ

ழைத்து உயர்ந்த உத்தியோகங்கொடுத்துத் தம்முடன் வைத்துக்கொண்டனர். பிள்ளையவர்களும் நாயகர் மகிழ்வுறும் வண்ணம் தமது கடமையைச் செவ்வனே நடாத்திவந்தனர் வேதாரணியத்திலேயிருந்த தமதுதமையனர் புத்திரப்பேறின்றித் துன்புறுவதைக் கண்டபிள்ளையவர்கள் தம்முடைய அருந்தவப்புதல்வராகிய சிவசிதம்பரப்பிள்ளையை அவருக்குத் தத்தபுத்திரராகக்கொடுத்தனர். தாம் கதிபெறுதற்குத் தமக்கும் ஓர் புத்திரன்வேண்டும் என்னும் விருப்பத்தால் தக்ஷணகைலாயத்து ளொன்றாய் விளங்கிய திரிசிராமலையின் கண்ணே எழுந்தருளி யிராநின்ற தாயுமானேசுரரைத் தமது மனைவியாருடன் அநுதினமுஞ் சென்று அன்புடன் வழுத்திவந்தனர். வேண்டுவார் வேண்டுவன ஈயும் விமலமூர்த்தியாகிய தாயுமானேசுரரது திருவருளினல் அவர்மனைவியார் கருப்பவதியாயினர். பத்துத்திங்கள் செல்லுதலும் தம் ஊர் அடைந்திருந்த தம்மனைவியார் ஓர் ஆண்மகவைப் பெற்றனர். தமதுபுதல்வர் பிறந்த இடம் திருமறைக் காடாயினும் தாயுமானேசுரரது அநுக்கிரகத்தினல் அவதரித்த அருந்தவக்குழவி ஆதலின் கேடிலியப்பபிள்ளை தமதுபுதல்வருக்குத் தாயுமானவர் எனநாமகரணம் செய்தனர்.

தாயுமானவர் தகுந்தகாலத்தில் வித்தியாரம்பஞ்செய்யப்பெற்றுச்சிலநாளிலேயே ஆரியதிராவிட பாஷைகளிலேயுள்ள இலக்கண இலக்கியங்களையும் வேதாகமங்களையும் புராணேதிகாசங்களையும் விரைவிற்கற்றுத் தேறினர். இவையன்றித்தேவார திருவாசகம் முதலிய பன்னிருதிருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரம் எனப் பெயர்பெற்ற பதினன்கு சித்தாந்த சாத்திரங்களையும் அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழையும் பாராயணஞ்செய்து வருவாராயினர். இவர் இருமுதுமொழியினும் பயின்றவரென்பது மேற்காட்டும்!

“கல்லாதபேர்களே நல்லவர்கணல்லவர்கள்
கற்றுமறிவில்லாதவென்
கர்மத்தையேன்சொல்வேன் மதியையேன்
சொல்லுவேன்கைவல்ய ஞானநீதி
நல்லோருரைக்கிலோ கன்மமுக்கியமென்று
நாட்டுவேன் கன்மமொருவ
னுட்டினலோபழைய ஞானமுக்கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொருத்தன்வரவுந்த்ராவிடத்திலே
வந்ததாகவிவகரிப்பேன்
வல்லதமிழறிஞர் வரினங்ஙனேவடமொழியின்
வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையுமருட்டிவிடவகைவந்த
வித்தையென்முத்திவருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே

(தாயுமானவர் சித்தர்கணம். செய்யுள் ௰) என்பதனுலுணரப்படும்.

(தொடரும்)

வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
மடவில்.

# பெண்கள் கல்வி.

எம் சகோதரிகளே!

சிலர் தமது கொழுநனை வஞ்சித்துப் கொண்ட பொருளைப் பயனின்றி அழியேம் அறத்தாற்றில் விடுக்குவமென்பராயில், வஞ்சனையால் வந்த அப்பொருள்கொண்டறஞ்செய்தல், பசுவினைக்கொன்று அதன்றோலாலாகிய செருப்பைத் தானஞ்செய்வதனேடொக்கும் என்பது நீதிநூற்றுணிபாதலினல் அவைகள் கருதியாங்குப் பயன்படுதலுடையனவுமல்ல என்றுணரக் கடவீர். இல்லறவாழ்க்கையைக் கொண்டுய்க்கும் நாயகனிடத்தே இன்பமடைதலன்றி, இவைபோன்றனவற்றின்கணன்று. உம்மை நீர் மேம்படுநிலையில் நிறுத்தாது மற்றவர்பால் மற்றவைபால் இன்பம்பெற

க்கருதாநிற்கின்றீர். இக்கால நாகரீகங்களெல்லாம், சுகசாதனங்கள் என்று எண்ணப்படினும், துன்பத்திற்கேதுவாவனவேயாம். சிலர், தமது கொழுநனைச் சுற்றந்தழாஅல் என்னுங்குணம்சென்று பற்றுவண்ணம் காக்கவும் முயல்கின்றார்கள். நீவிர் செய்யுந் தொழில்களை இவைகளே இறுதிவினைகள்என்றுஎண்ணுதிர். இளமையோ நிலையாது. மனதிலே எழும் பெருமிதம் ஒழிமின். மன நிறைவுடையீராகுதிர். கிடைத்தகாலத்தை நன்றாக உபயோகஞ்செய்மின் துன்பமேவாய்மையைவெளிப்படுத்தும். இருள்தான்நட்சத்திரங்களைக்காட்டும். சம்சாரம் துக்கசாகரம் என்ற நூல்கடாமே மீட்டு மதனுளமூழ்ந்தவிதித்தது, துன்பமிகுமாயின்வாய்மைவெளிப்பட மெய்யுணர்வுபிறந்து அவாவற்றுத் துறவு கைகூடும் என்பது நுதலியேயாம். நாயகனுடைய கிளைஞராயினர் தந்தனவற்றைத் தாம் தீண்டாது நாயற்கே எனவிடுத்தும் தம்முடையன அவர் கிளைஞராயினருடையனவற்றோடு ஒருங்குவைத்தெண்ணப்படுங் காலும்வேற்றுமைதோன்றப்பகுத்துவைத்தும் இவ்வாறு பிரிவுசூழ்ந்து கேடுவிளைக்கும் பாழ்ங்குணம் பசையறக்கடிதல்வேண்டும். ஆதலாற்றூங்கிய குடும்பபாரத்தை ஆரவாரத்தோடு கூடிய டாம்பிகமின்றி நடுவுநிலை தெளிவு ஆராய்வு இவைகளோடு பொறுத்துத் தாங்கக்கடவீர். சம்சாரம் யமனதுமுகமென்றும், எண்ணங்களும் தவறுகளும் மாறிமாறிப் பலதிறப்பட்டுத் தோன்றுவதற்கேவாவார் பெண்களேயென்றும் சான்றோர் கூறுவர்.

வீட்டில் நீலி வெளியே சீலி கோயிலில்ஞானி என்றுசொல்ல ஒழுகுவாரே இக்காலத்துப் பெரும்பான்மையோர். இவர் புரியும் நகை அவர் பணப்பெட்டியினழுகையாகும். ஆதலினால், ஆராயவேண்டின் நெருப்பாற் பொன்னையும் பொன்னாற் பெண்ணையும் பெண்ணால் சான்றோரையும் ஆராயின் உண்மைவெளிப்படும். பெண்கள், நட்பினும்பகையினும் சிந்தனையின்றி எதனையுஞ் செய்துவிடுவர். கல்வியறிவுடையராயினும். சிலாபால் இவைநிகழக்காண்டுமேயெனில், கல்வியும் வேறு, ஞானமும் வேறு, குணமும் வேறு; இவைகளுள் ஒற்றுமையுடையன வல்லன முன்னைத்தவமுடையார்க்கே என்றறிக. இளைஞர்கள் வித்தியாசாலாப்பியாசம் விட்டபின் படிக்கும் கலாசாலைகள் பெண்களேயாகும். துறக்கமும் நரகமும் அவர்களே. புன்னகை, இன்முகமலர்ச்சி, அன்பொழுகும் கடைக்கணோக்கு இட்டமாவன முடிவுறுங்கால் வேண்டுவ வேண்டியவண்ணம் செய்தல் ஆகிய இவைகள் வாழ்க்கைத் துணையாயினாளிடத்தில் இன்மையாலன்றோ வரைவின்மகளிர் நாடுகளிலே அறிவிலரால் வேண்டப்படுகின்றார்கள். இளமையும் அழகுமுடையாளொருத்தி ஒன்றைவினவின் கடைக்கண்காட்டல், சிலேடவார்த்தை அன்றி அடாதவார்த்தைமொழிதல் ஆகிய இவைகளே பெரும்பான்மையும் இளைஞர்பால் நிகழக்காண்டுமன்றி வினவியவரின் இன்ப துன்பங்களைக் கேட்டறிந்து ஆவனசெய்தல் காணப்படாமையின், நாம் வார்த்தையாடற்குரியாரைக் குறிப்பினாலுணர்ந்து அவர்தகுதிகண்டே வார்த்தையாடல்வேண்டும் நான்கூறியவற்றைக் கடைப்பிடித்தொழுகுதல் சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததொன்றாகும்.

இங்ஙனம்.

அன்னபூர்ணேசுவரி.

## புத்தகவரவு.

### கந்தபுராணத்துள்ள தோத்திரப்பாக்கள்.

இஃது எமது தமிழாசிரியர்களி லொருவராகிய மட்டுவில் ஆசிரியர் ஸ்ரீமத். க. வேற்பிள்ளை அவர்கள் புதல்வர் ஸ்ரீமத். வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களால்தொகுக்கப்பட்டது. கந்த

புராணத்திலே தோத்திர ரூபமாகவுள்ள திருவிருத்தங்களுள்ளே சரித்திரசம்பந்தமில்லாதனவற்றையே தெரிந்து விநாயகர்க்கு நான்கும், சிவபெருமானுக்கு முப்பத்தொன்பதும், உமாதேவியாருக்கு ஒன்றும், வைரவக்கடவுளுக்கும் வீரபத்திரக்கடவுளுக்கும் இவ்விரண்டும், சுப்பிரமணியக்கடவுளுக்கு இருபத்தாறும், ஐயனார்க்கு இரண்டும், திருநந்திதேவர்க்கும், வேற்படைக்கும், நால்வருக்கும், திருத்தொண்டர்க்கும், சரசுவதிக்கும் ஒவ்வொன்றுமாக ஷை பிள்ளை அவர்கள் 84 திருவிருத்தங்களை நிரல்படக்கோத்துச்சைவசமயிகளெவரும் பாராயணஞ்செய்தற்குரியதாகச் செய்துதவியமை எவராலும் பாராட்டப்படத்தக்கதேயாம்.

இதன் விலை—சதம் 5.

## ஆர்யமத உபாக்யானம்.

இஃதோர் நீதிநூல். நீதிகளையும் அறங்களையும், மதவிஷயங்களையும் புராணசரித்திர வாயிலாகச் சிறுவரும் தெரியும்வகை சுருக்கமாகச் செந்தமிழ் நடையிலே விளக்கிக்காட்டுவது. குடும்பக்கடமைகள் தர்மவிஷயம் அதர்மவிஷயம் எனமூன்று பாகங்களையுடையது. ஒவ்வோர்கதையினிறுதியினும் அக்கதையினுலுற்ற நீதிமொழிகள் திரட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. முதலாம்பாகத்தில் புத்திரர்கடமை மனைவியின்கடமை சிஷ்யன்கடமை சகோதரன்கடமை இவைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இரண்டாம் பாகத்திலே நேர்மை, உண்மை, அன்பு, பக்ஷபாதமின்மை, நியாயம், பொறுமை, காருண்யம், விடாமுயற்சி, நன்றியறிவு சத்சங்கம் முதலிய தருமங்கள் விளக்கப்படுகின்றன. மூன்றாம்பாகத்திலே கோபம் கர்வம் ஆசை குடி கொண்டதுவிடாமை தீச்சார்பு முதலிய அதர்மங்களால் விளையும் தீமைகள் கூறப்படுகின்றன. பாலபாடம்போல ஒவ்வொன்றும் சிறு சிறுபாடங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நமது சைவகலாசாலைகளிலே வகுப்புப்பாடமாக நியமிப்பதற்கு ஏற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலாசிரியர் திருநெல்வேலி பிரமஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள். அச்சிட்டுவினர் சென்னை ஜனரல் ஸ்பளேஸ் கம்பெனியார்.

இதன் விலை—அணா 4.

## குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது.

இந்நூலாசிரியர் யாழ்ப்பாணத்திலே சுன்னுகத்திலே 200 வருடங்களுக்கு முன்னிருந்தவரும் சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம், அமுதாகரம் முதலியநூல்களை இயற்றியவருவாகிய காசி வரதராஜபண்டிதர் அவர்கள். இது யாழ்ப்பாணம் காங்கேயன் துறையைச்சேர்ந்த கண்ணியவளை என்னுமிடத்திலெழுந்தருளியிருக்கும் குருநாதசுவாமிமீது. காதல்கொண்டாளொருத்தி தன்கிளியைத் தூதுவிடுத்ததாகக் கலிவெண்பாவாற் செய்யப்பட்டதொரு பிரபந்தம் இதனை எவர்க்கும் உபயோகமாக அச்சிட்டு வெளியிட்டவர். சுன்னுகம் ஸ்ரீமத்.அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் மாணுக்கரும் இயற்றமிழ்ப் போதகாசிரியரும் சைவப்பிரசாரகரும் சுன்னுகம் சைவவித்தியாசாலைத் தலைமைஉபாத்தியாயரும் நூலாசிரியர்வழித்தோன்றலும் விஷயங்களைத் தொடர்புறவிளக்கி எழுதுவதில்மிக்கதிறமையுடையவருமாகியஉடுவில் பிரமஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள்.

இதன் விலை—சதம் 10.

## தென்னை.

இதில் தென்னையின்சிறப்பும் வேர், தண்டு, மட்டை, பன்னாடை, பாளை, தேங்காய் இவைகளின் உபயோகங்களும் இதனிருப்பிடமும் வகைகளும், நெற்றின் திறங்களும் நாற்றிடும் முறைகளும் இதன்வளர்ச்சிக்கேற்ற நிலங்களிவையென்றும் இதற்குவேண்டும் வேலி நடவு நிழல் வளர்ச்சி, களைபிடுங்கல், நீர்பாய்ச்சல், எருவிடல் முதலியவைகளைப்பற்றியவிஷயங்களும். தேங்காய், இளநீர், எண்ணெய், பிண்ணாக்கு, நார், கள்ளு, சாராயம், வெல்லம், முத்து, மருந்துச்சரக்குஎன்று அத்தென்னையினின்றும் உண்டாகும் பொருள்களின் வரலாறுகளும் இதனைக்கேடுறச்செய்யும் வண்டு, எலி, மரநாய், மின்னல்கள் ஆகியஇவைகளின் இயல்புகளும் அவைகளைநீக்குமாறும் இவைபோன்ற அறிதற்கு

றிய பலவிஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. தென்னஞ்சோலை மிகுந்துள்ள எமது இலங்கைநாட்டின ரொவ்வொருவருக்கும் இது இன்றியமையாதது செந்தமிழ்நடையினையுடையது.

இத்துணைச்சிறந்த அநுபவசாத்திரத்தினை இயற்றி உலகினர்க்குதவி உபகரித்தவர் பென்ஷன்விவசாய இன்பெக்டரும் விலைமதித்தற்கரிய "தென்னிந்திய விவசாய" பத்திராதிபருமாகிய ஸ்ரீமான். ஜி இராசகோபாலநாயுடு காரு அவர்கள்

இதன்விலை—ரூபா 1.

---

## சாவித்திரி வெண்பா.

இது, 224 வெண்பாக்களால் சாவித்திரியெனப்படும் கற்பாக்கினியின் கதையினைக் கூறுவதொரு நூல். பெற்றோர்க் கிதம்புரில், பெரியார்ப்பேணல், கற்பின்றிறம், மகளிரிலக்கணம், தெய்வங்கொள்கை, இனியவை கூறல், சொல்லுறுதியின்பெருமை, ஊழின்வலி, முயற்சியின்றிறம் முதலிய நீதிகளை அங்கங்கே வற்புறுத்திச் செல்லும். நளவெண்பாவே போன்று மிகவும் இனிமையும் புகைபொருளும் செஞ்சொற்றொடர்களும் கொண்டுள்ளன. சொற்சுவை பொருட்சுவை நுகர்வாரிதனருமையினை உணர்வார். திருக்கைலாய பரம்பரை, திருவாவடுதுறை யாதீன, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்கள் மாணாக்கராகிய, ஸ்ரீ. சி. தியாகராசச்செட்டி யாரவர்களபால். கல்வி பயின்றவராகிய. ஸ்ரீமான். ஐ. சாமிநாத முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. ஆசிரியபரம் பரையினல் செய்யுணயம் பொருணயம், எங்ஙனமென்று அறியலாகும். இதனை எமது பார்வைக்கனுப்பியவர்கள் சென்னை மயிலை மகாவித்வான். ஸ்ரீமத் சே. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்

---

## சாட்சிநூல்.

இஃது இந்நாள்காறும் வெளிவராத புதியதொரு சாஸ்திரம். ஆங்கிலத்திலே பலவகையாற் கொண்டுகூட்டி மயங்குறக்கிடந்த பற்பல வியாக்கியானங்களின் கடலுள் மூழ்கி ஆழ்ந்து புதைந்து கிடந்தனவற்றைக் கொண்டெழுந்து ஐயமாசகலநீக்கித் தெளிவுற வெளியிடைக்கொடுவந்து நிரல்படக்கோத்து அவ்வவற்றிற் கேற்ற செந்தமிழ்மொழிகளாற் சூத்திரித்து இந்நூலினை யாத்த ஆக்கியோரது நுண்ணறிவின்றல் ஆங்கிலமொழியோடு நோக்குவார்க்கே புலனாகும்.

இன்னும் இவ்வாசிரியர் தென்மொழியிலன்றி வடமொழியிலும் பயின்றுபெற்ற அறிவின்றிட்பமுடையர் என்பதற்கு இத்துணையாற் சொற்சுருங்க மொழிபெயர்த்து விளக்கும் மாண்பே அமைந்தசான்றாகும். சூத்திரங்களின் நிலையும் அமைப்பும் பாஷாகதிகளும் பிறவும் பெரும்பான்மையும் நன்னூலையேஒத்துநடைவாநிற்கும்.

இந்நூலில் வழக்குகளிலே ஒவ்வொருவரது உரித்துக்களும் ஒப்பனைபண்ணி உறுதிப்படுத்து மிலக்கணங்களும் அநுமானவிளக்கவகைகளும் வாய்மொழிச் சாட்சி சாசனச்சாட்சிஎன்றற்றொடக்கத்தனவாய சாட்சியின் றிறங்களும் சாட்சியாவார்க்கு வேண்டுவன இவை என்பதும் இவைகளோடுதொடர்புடையனவாயும் இவைகட்கயலாயுமுள்ள சட்டங்களின் நியதிகளும் பிறவும் செவ்வனே கூறப்படுகின்றன.

இந்நூல்மூன்று பாகங்களையுடையது. முதலாம்பாகத்தில் வழக்குத்தொடர்பு ஒப்புக்கொள்ளுதல், சாட்சியாயழைக்கப்படமாட்டாதாரகூற்று, விசேஷவர்த்தமானங்களையொட்டிக் கூறியவை, ஒருகூற்றில் எவ்வளவு ரூபிக்கவேண்டியது, நீதித்தலங்களின் தீர்ப்புகள் எப்பொழுதுதொடர், பிறர் அபிப்பிராயம் எப்பொழுதுதொடர் என்பனவும் பிறவும் கூறப்படுகின்றன.

### இரண்டாம்பாகத்தில்

ருசுப்படுத்த வேண்டாதவிஷயம்
வாய்மொழிச்சாட்சி
சாசனச்சாட்சி
பகிரங்கசாசனங்கள்
சாசனம்பற்றிய கொள்கைகள்

சாசனச்சாட்சியால் வாய்மொழிச்சாட்சி விலக்கு.

—என்பன எடுத்துக்காட்டப்படுகின்றன

மூன்றாம் பாகத்தில்

சாட்சிகொடுவரது மதன்பயனும்

ருசுச்சுமை
மறுக்கவொட்டாமை
சாட்சி, சாட்சியாராய்ச்சி
சாட்சியைத்தகாவகையேற்றல் நீக்கல் என்பனவும் பிறவும் சொல்லப்படுகின்றன.

இவ்விவகாரவிஷயங்களை யுடைமையினால் இது எவர்க்கும் பயன்படும்பொருட்டு இயற்சொற்களாலமைந்துளதேனும் சூத்திரரூபமாகிய செய்யுள் வடிவாகஇருப்பது நோக்கி அரும்பதவிளக்கமும் நூலாசிரியரால் எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமான் பொ. இராமநாதத்துரை கே. சி. சீ. எம் ஜீ. அவர்களே இதற்கு அபிப்பிராயம் கொடுத்திருக்கின்றார்களென்றால் இனிநாம் கூறக்கிடந்ததென்னை.

இத்துணைச்சீர்மை வாய்ந்த நூலினை இயற்றியவர் வண்ணை அந்தாதி சிங்கையந்தாதி சித்திரகவிகள் என்பனவற்றை இயற்றிய சதாசிவ பண்டிதரவர்களின் பிற்றோன்றலும், இலங்கைச் சுப்பிரீங்கோட்டு நியாயதுரந்தரரும் ஆகிய யாழ்ப்பாணம்.

வண்ணைநகர் ஸ்ரீமான். சிவக்கொழுந்துப்
பிள்ளை அவர்கள்.

---

## பிராசீன தர்மங்களினுயர்வும் இக்கால ஆசாரங்களும்.

இது அந்நிபெஸன்ட் அம்மையாரது ஆங்கில உபந்நியாசங்களின் மொழிபெயர்ப்பாயுள்ளது. இதில் மூன்று உபந்நியாசங்களடங்கியுள்ளன. முதலாவது உபந்நியாசத்தில் பிரமசரிய முதலிய நால்வகை நிலைகளும் இரண்டாமுபந்நியாசத்தில் ஆலயம், பூசை, என்பனவைகளைப்பற்றிய அமைதிகளும் சூக்குமார்த்தங்களும், பூசனைபுரியு மாசாரியர்களது இலக்கணங்களும், மூன்றாமுபந்நியாசத்தில், சாதிபேதங்களும் அவைகளினுற்பத்தியும் அவைகளமைக்கப் பட்டிருப்பதி னுண்மைகளும், நான்காமுபந்நியாசத்தில், மாதர்தருமங்களும் கற்பின்பெருமையும் பிறவும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வரிய நூலைச்செந்தமிழ் நடையிலே மொழிபெயர்த்துபகரித்தவர்கள். மதுரை பூரண சந்திரோதயப் பத்திராதிபர் பிரமஸ்ரீ. வ. நாராயணஐயர். B. A. B. L. F. T. S. அவர்கள்.

இதன்விலை—அணா 6.

---

## கோஹசாஸ்திரம்.

இதில்மூன்றுபாகங்களுள்ளன மாதராடவர் தருமங்களும். தர்மாதர்மபேதங்களும், வயித்திய முறைகளும் நோய்நிலைகளும் அதற்கேற்ற மருந்துவகைகள் செய்யும் திறங்களும் குடும்பவைத்திய நுட்பங்களும் சிகிச்சைகளும் ஸோடா வாட்டர் முதலிய பற்பல பொருள்கள் செய்யும் விதங்களும் பிறவும் மிகவிரிவாகச் செந்தமிழ் நடையிலே எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருகுடும்பத்திற்கு மிஃதின்றியமையாதது. இதனை இயற்றிய நூலாசிரியர். கொழும்பு ஆயுள் வேதபண்டிதர். பிரமஸ்ரீ. மகாராஜ கங்காப்பிரசாத் பண்டிதர் அவர்கள்.

இதன்விலை ரூபா 3—00.

எஞ்சியவைமறுமுறை

---

## சமாசாரம்.

---

சிலாபேதம்—பின்லன்டில் மழைக்காலத்திற்க நிறங்கொண்டும் ஏனையநாட்களில வெண்ணிறப்புள்ளி யுள்ளனவுமாகிச் சீதோஷ்ணகால பேதவியல்புகாட்டும் கற்கள் இருக்கின்றனவாம்.

புதுமருந்து—நியூயோர்க்கில் காய்ந்த புல்லையும் நீரையும் உட்கொள்ள அசீரணமமாறி ஒருநோயாளன் சுகப்பட்டனனாம்.

வியாபாரவிலக்கு—வக்கீல்கள் மேற்கோட்டார் உத்தரவின்றி எவ்வகைப்பட்டவியாபாரமும் செய்யப்படாதாம்.

மாதிரிக்குழாய்க்கிணறு—புதுச்சேரியிலே பூமியினுள்ளே குழாய் இறக்கி ஓர்வகைக் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன இக்கிணற்று நீர் மிகவும் சுத்தமாயிருக்கும் இது (*ArtesianWells*) என்று சொல்லப்படுகின்றது.

மீனிலேபட்டு—மத்தியதரைக்கடலிலே பின்னு எனப்படும் ஒருவகை மீனிலிருந்து பட்டு எடுக்கப்படுகின்றதாம்.

ஓர் நூதனக்கிணறு—ஜாவா தேசத்தில் ஒரு கிணறு இருக்கின்றதாம் அதனது நீர் எம்மிருதுவான பொருளையும் கல்லைப்போலக் கடினமாக்கு மியல்புடையதாம்.

உபநயனம்—வண்மேற்கு பிரமஸ்ரீ சி. சோமசுந்தர ஐயரவர்களின் புத்திரர் பிரமஸ்ரீ துரைச்சாமி ஐயரவர்களுக்கு இந்தமீ˚ ககூஉ உபநயனம் நடைபெற்றது.

போலிஸ்நாய்கள்—வங்காளத்தில் குற்றவாளிகளை பார்த்துப்பிடிப்பதற்கு நாய்களைக்கற்பித்து உபயோகப்படுத்த முயல்கின்றனராம்.

புறத்தோற்கூடாரம்—வட இந்தியாவிலே 60 அடி நீளமும் 40 அடி அகலமுமுள்ளதாக முழுவதும் புறத்தோலினாலே செய்யப்பட்டு வருகிறதாம் இதற்கு நாற்பதினாயிரம் ரூபாவரையில் மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

கங்காசத்திரம்—இதனைக்கட்டுவித்தவர்கள் ஸ்ரீமான். வை. வல்லிபுரம் பிள்ளை அவர்கள் என்பதை எவரும் அறிவர். இதில் இப்பொழுது ஆசாரானுட்டானங்களுக்குக் குறைவின்றி ஸ்நானாதிகள் செய்துகொள்வதற்கு வசதியாக முன்னுள்ள கிணறு இருபாகமாகப் பிரிக்கப்பட்டுக் கட்டிடம் அமைக்கப்பட் டிருக்கின்றது இச்சத்திரத்தின் முற்பக்கச்சாலை உபயோகத்திற் குரியதாகக் கட்டப்படுகின்றது பிள்ளை அவர்களும் அவர்கள் செய்துவரும்-தருமங்களும் நீடூழிவாழச் சிவபெருமான் திருவருள்செய்வாராக.

விவாகம்:—யாழ்ப்பாணம் சைவப்பிரகாசவித்தியாசாலை மானேஜர் ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்களின் மருகர் ஸ்ரீ. வை. விநாசித்தம்பி அவர்கட்கும் சிதம்பரம் ஸைவப்பிரகாசவித்தியாசாலை மானேஜர் ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை அவர்களின் தமையனார் ஸ்ரீமத் ச. சபாபதிப்பிள்ளை அவர்களின் புத்திரிக்கும் இந்தமீ˚ ருஉ விவாகம்நடைபெற்றது.

இந்தியாவில் இறப்பவர்—இந்தியாவில் ஒருநிமிஷத்திற்கு 300 வீதமாகும்.

---

### ஸ்ரீமத் ஆ சரவணமுத்துப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணம் கல்லூரியிலே ஆங்கிலம் பயின்று தேறியவரும் புங்குடுதீவு மேற்கு உடையார் ஸ்ரீ அ. ஆறுமுகமவர்களின் சிரேட்டபுத்திரரும் ஷெ ஊர் றிசீவிங் போஸ்ற் ஒபிசருமாகிய இவர் இப்பொழுது அவ்வூர் சனனமரணப்பதிவுகாரராகவும் அரசாட்சியாரால் நியமிக்கப்பட்டு உத்தியோகங்களை நடத்திவருகின்றார்கள். கல்வியறிவொழுக்கங்களிலே மேம்பட்டவராதலால் எமக்குப்போலஎவர்க்கும் இந்நியமனம் மகிழ்வினை விளைக்கும் என்பது எமதுதுணிவு.

---

முத்தங்கொடுத்தல்—ஆஸ்டியாதேசத்தில் கம்பெனியில் இருந்த ஒருவன் ஒருத்திக்கு ஆபீசிலே முத்தங்கொடுத்தானென்று வேலையால் நீக்கிவிட பின் கோட்டில்நடந்தவிசாரணையில் பெண்ணே இவனுக்கு முத்தங்கொடுத்தாள் என்றுவெளிப்பட்டமையால் மீண்டுமவனை உத்தியோகத்தில் நியமிக்கும்படி கோட்டார் உத்தரவுசெய்தார்களாம்.

மரணம்—வண்மேற்கு இரத்தினவியாபாரம் ஸ்ரீமத் க. ஆறுமுகம்பிள்ளை அவர்களின் தமையனார் ஸ்ரீமத் க. கார்த்திகேசபிள்ளை அவர்களின் தருமபத்தினியார் இந்தமீ˚ 3 உ சிவபதமடைந்துவிட்டதை அறிந்து பெருந் துன்பமடைகின்றோம்.

மின்சாரவாள்—120 அடிகுறுக்களவுள்ள ஒருமரத்தை 6 நிமிஷத்தில் அரை அங்குலப்பலகையாக அறுக்கும் மின்சாரவாள் ஒன்றை பேர்ளின்நகரில் ஒருவர் கண்டுபிடித்திருக்கின்றார்.

பெண்மாலுமி—லேடிமாக்கரட்மாக்ரீ என்னுமோர்மாது புகைக்கப்பல்செலுத்துவதில் வன்மை படைத்தவராம்.

சுண்டெலி—சுண்டெலிகள் கப்பலிலே லண்டனுக்குக் கொண்டுபோகப்படுகின்றன.

கரியபனிக்கட்டி—சுவிட்சர்லாண்டில் கருநிறமுள்ள பனிக்கட்டி இருக்கின்றதாம் அதில் கரியசந்துக்கள் நகர்கின்றனவாம்.

முத்துமழை—கோபியாவிலே கௌசாவிலே மழைவெள்ளத்தில் முத்துக்கள் மிதந்தனவாம்.

ஆகாயவிமானமும் தமிழனும்—புதுசேரியிலிருந்து பிரான்சுக்குப்போன "நாராயணபிள்ளை" என்னும் தமிழிளைஞன் ஆகாயவிமானத்திலேறிக் கடல்வழியே சென்று சுகமாயிறங்கினனும். தமிழருள் இவ்வாறு முதற்செய்தவர் இவரே.

தேனீயின்உபயோகம்—ஒருபுஷ்ப மகரந்தம் மற்றைய அதே சாதிப்பூவில் விழுந்தாற்றான் வித்தும் காய்களும் உண்டாகும் ஆதலால் செடிகளின் விருத்திக்குத்தேனீ காரணமாம்.

பூச்சிகளைத்தின்னும்செடி—டீசல் என்னும் செடியின் இலைகள் காம்பினடுவே ஒருகிண்ணம் போலிருக்கும். அதனுள் புழுக்கள் ஈ எறும்பு முதலியன இருக்கும் அவைகளை அதனுள்ளிருக்கும் நீர்கரைத்து தமது வளர்ச்சிக்கேற்ற ஆகாரமாக்கிக்கொள்ளும்.

தாய்க்கொலை—ஹௌன்ராவைச்சேர்ந்த மட்ஞேவில் பாசுகியோரா என்பவன் தனதுதாயின் தலையைவெட்டி தன்கழுத்தில் மாட்டிக்கொண்டு ஓர் மரத்திலேறினனும்.

நீரிலும் நெருப்புச்செல்லும்—ஸர்வில்லியம் ராம்ஸே என்னும் ரசாயனசாஸ்திரி தண்ணீர்ப்பாத்திரமொன்றை மேசையில் வைத்துவிட்டுப் படிப்பித்துக்கொண்டிருக்கும்பொழுது சூரியகிரணம் தண்ணீர்மூலமாய்ச்சென்று ஓரிடத்தில் ஒன்றுசேருதலும் மேசையிலே நெருப்புண்டாகி ஒருதுவாரமும் மேசையிலுண்டாயிற்றும்.

மேரி—மேரிஎன்னும் பெயருடைய மாதரெல்லாம்கூடி நமது மேரி ராணியாருக்குப் பட்டாபிஷேககாலத்தில் காணிக்கைகொடுக்க முயன்று வருகின்றார்கள்.

புகைக்கப்பல்—விடி ஆப் பெஞரிஸ் என்னும் புகைக்கப்பலும் விடி ஆப் பாம்பே என்னும் புகைக்கப்பலும் ஒன்றுடனென்று மோதிச்சேதமுற்றனவாம்.

சத்யபாலா தேவி:—வங்காளத்திலே பிராமணகுலத்திலே உதித்த சங்கீத சாமாத்தியரான வயதுள்ள இப்பெண்மணி, அமெரிக்காவிலே, நியூயோர்க்கிலே. கார்னீகி மண்டபத்திலே, டக்டர் C. H. வீலர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ்; வீணையிலே சாமவேதகானம் செய்தும், ராகங்களை வாசிக்க, சபையார் ஆனந்தத்துடன் கண்களை மூடிக்கொண்டு கேட்டிருந்து பெருந்தொகைப் பொருளையும் தங்க மோதிரமொன்றையும் பரிசாகக்கொடுத்தனராம்.

மீன்களுக்கு வைத்தியசாலை—அமெரிக்காவிலே மீன்களுக்கு வைத்தியசாலை தாபிக்கப்பட்டிருக்கின்றதாம்.

நாவிதர்திருத்தம்—பங்களூரிலே நாவிதர்கள் கூடி சங்கமொன்றுதாபித்து ஆடுமாடுபலிகொடுப்பதையும் மதுபானத்தையும் நீக்கிக்கொள்ளும்படி தீர்மானித்து அவ்வாறுசெய்துவருகின்றார்களாம். எம்மூரிலே மேற்குலவத்தவருக்கு இவைகளை நீக்குதற்கு அரசர் கட்டளை வேண்டப்படுகின்றது.

புதியவிவாகம்—வங்காளத்திலே டக்டர் எச். மெயிட்லாண்டு என்னும் ஆங்கிலேயக்கனவான் டாக்டர் ஸ்ரீமான் பி. கே. ராய் அவர்களின் குமாரத்தியாகிய ஸ்ரீமதி. லலிதாராய் என்பவரைப் பிரமசமாசமுறைப்படி மணமுடித்துக் கொண்டனராம்.

பணவாசை—தென் அமெரிகாவிலொருவன் வழியில்வரும்திருடர்க்கஞ்சி தன்கையிலிருந்த 12 பவுண்களை ஒவ்வொன்ருய் விழுங்கிவிட்டு குறித்தஇடம்போய் பேதிமாத்திரைசாப்பிட்டும் அவைகள் வெளிவாமையினலும் வயிறுவீங்கி வருத்தமதிகரிப்ப வைத்தியர்கள் மயக்கி சத்திரமிட்டறுத்து பவுண்களைஎடுத்து மீட்டும் தைத்துவிட்டார்கள் அவனும் உயிர்பிழைத்தான் எவ்வாருயினும் பொருள்கிடைத்தமைபற்றிப் பெருமகிழ்வடைந்தான்.

## ஸ்ரீமத் ந. ச. சதாசிவப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணம் நல்லூரிலே கந்தசபாபதிப் பிள்ளை அவர்களுக்கு 1825-ம் ஆண்டளவில் புத்திரராகவந்துதித்தவர். இவர் வித்தியாரம் செய்விக்கப்பட்டுக் கல்வி கற்று வருநாளில் கலியாப்தம் சகூ௫0-ம் ஆண்டாகிய கீலக வருஷம் ஆவணி மீ ௫-ம் திகதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைக் குருமூர்த்திகளாகவந்தடைந்தார். அப்பொழுது இவருக்கு வயசு கசு.

இவர் நாவலரவர்கள் வித்தியாசாலையிலே ஓர் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். பின்பு அன்னவஸ்திராதிகளெல்லாம் நல்கிப்போஷித்து வந்தவர்களாகிய நாவலரவர்கள், நைட்டிகப் பிரமசரிய விரதத்தைக் கைக்கொண்டு உற்றாருறவினரெனப்படும் தொடர்புடையார் மாட்டுள்ள காதலும் களிப்பும் நீக்கி உடல்பொருளாவி மூன்றையும் தம்மிடத்தே ஒப்புவித்து நின்ற பிள்ளையவர்களது சிஷ்யகுணங்களையெல்லாம் ஆராய்ந்து தெளிந்து தாம் மேற்கொண்டுநடத்திவரும் வித்தியாசாலைத் தருமங்களுக்குத் தனாதிகாரியாக நியமித்து சென்னபட்டணம் போகும்போது உடன் அழைத்துச்சென்று பின் ருதிரோற்காரி௵ யாழ்ப்பாணம்வந்தார்கள். பிள்ளை அவர்களும் உடன்வந்து நாவலரவர்கள் சிலநூல்களைத் திருத்தி அச்சிடுவிக்கும்படி ஏவிய ஏவலைச் சிரமேற்கொண்டு மீண்டும் சென்னபட்டணம் சென்று குருமூர்த்திகளிட்ட ஆணைவழி கடவாது நடத்திவந்தார்.

நாவலர் பெருமானவர்கள் சென்ற பிரமாதி௵ கார்த்திகைமாசத்தில் பரிபூரணமானபின்பு யாழ்ப்பாணம் சைவப்பிரகாசவித்தியாசாலையை நாவலர்பெருமானவர்களுடைய மருகரும் மாணாக்கரும் ஆகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களோடு தாமும் ஒருவராக நடத்தியும் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத்தருமங்கள் தளர்வுறாது பாதுகாத்தும் வந்தார். வித்துவசிரோமணிகள் சென்ற ஏவிளம்பி௵ மார்கழி மீ யாழ்ப்பாணத்திலே சிவபதம் அடைந்தபின் சென்னபட்டணத்தில் இருந்த அச்சியந்திரசாலையும் அதன் வருவாயும் மற்றும் வித்தியாசாலைகளும் ஆகிய நாவலரவர்கள் தருமங்களையெல்லாம் போற்றிவளர்த்துவந்தார். யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலரவர்கள் தமையனார் புதல்வராகிய ஸ்ரீமத். த. கைலாசபிள்ளை அவர்கள் நடத்திவந்தார். அப்பொழுது தான் நாவலரவர்கள் குறித்த தானத்தில் புதுக்கட்டிடம் அமையப்பெற்றதும் அதற்குரிய கிலமாயிருந்த கிட்டங்கிகள் திருத்திக்கட்டப் பட்டதுமாம்.

யாழ்ப்பாணத்திலே இவைகளெல்லாம் தாம் எண்ணியபடியே நிறைவேற்றியபின் சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தம்விருத்தாப்பியதசையிலே, மானேஜராகவிருந்தவரும் நாவலரவர்கட்கு மாணாக்கரும் வித்துவசிரோமணி அவர்கட்கு மருகரும் மாணாக்கரும் ஆகிய ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளை அவர்களைக் கொண்டு ஏறக்குறைய இருபத்தையாயிரம் ரூபா வரையிற் செலவுசெய்து கண்டோர் யாவரும் வியக்குமாறு புதுக்கட்டிடம் அமைப்பித்து சென்ற சாதாரண௵ ஆவணிமீ உசு உ வித்தியாசாலைப் பிரவேசஞ்செய்வித்து மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தாபகராகிய ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ்ப் பலபுலவர்களைக் கொண்டு பிரசங்கமாரி பொழிவித்தார்கள்.

க-ன். (வரும்.)

...சாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

# அவுஷதம்.

## கஸ்தூரிதிராவகம்.

...த் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று ...வீதம் ஒருஅயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு ...காலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் ...ப்பட்ட நீர் அழிவினால் தாங்க முடியாத ...த்தை மூன்றுநாளையில் சுகமாக்கும் ௨௦- ...ருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொ ...தும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான ...ாய்வு துர்நடத்தையால் ஆண்மை பலமற்று ...ரகம்செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் ... மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூச ...ங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண் ... இன்னும் மேற்படி திராவகமானது இரு ...மலச்சூடு, காசரோகம், அதிகநாட்சென்ற ...ரோகம், தலைச்சுற்று மூளை பலவீனம், ஞாபக ...குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு ...சென்றபிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ...தம். இந்தமருந்திலே கஸ்தூரி, தங்கபஸ் ...ப்ரகப்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம் வேறு ...கைகளும், சேர்த்து திராவகம்வடித்துவைத் ...திறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க் ...டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடை ...மென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொ ... அனேக பிராயாணிகளைச் சுகப்படுத்தி விலை ... வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப் ... எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொ ...லவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவரு ...ா. பித்தபாண்டு, மகோதரம்; காய்ச்சல் ... வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்கு கைகண்ட ...தம். விலை அரை அவுன்சுக்கு ரூ. க௦. இத ...குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற் ... பிரத்தியேகம்.

## துஜ்ஜிபங்கதைலம்.

...தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந் ...த்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் ...ளைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணு ... பெலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய், இந் ...ம் குறைந்தும், துர் ஸ்திரி சையோகத்தால் ... உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெல ...ப்போகின்றார்கள். இவ்விருவகையுள்ளவர் ...மனக்கவலையுடன் வியாதியை ஒ வருக்கும் ...லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரிதிராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி ௪௨-தினத்துக்குள் வியாதி சுகப்படும், ௨௧-நாள்த்தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடவேரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ ௨. அணா ௮. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்திற்கு விற்பனைசெய்துவருகிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனாற் சாஸ்திரப்படி அதிக பொருள்செலவழித்துச்செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே. இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒருகுளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. ௩௨-குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். ௩௨-குளிகைகளின் விலை ரூபா ௨. தபாற்செலவு அணா ௪.

சாப்பிடும்விதம்—சையோகஞ்செய்ய அரைமணித்தியாலத்துக்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காய்ச்சியபசுப்பாலில் கற்கண்டுபோட்டுக்குடித்தால் இந்திரியம் இளகாது இளகவேணுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்,

...கங்காதரர் தைலம்:—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை அவுன்சு ரூபா ௫.

மகாநாராயணதைலம்:—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்குக் கைகண்டது. க அவுன்சு ரூபா க மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

## மிருத்துச்சீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை.

எட்டுவிதமான சுரத்துக்கும், அசுத்தசலத்தினால் கொசுமுதலான விஷசெந்துக்களினாலுண்டாகும்

மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும். கஅ-விதமான சன்னிக்கும் இதில் ஒ. மாத்திரையை இஞ்சிச்சாற்றில் அரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகமாகும். ஏழுவேளைசாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். கஉ குளிகையின் விலை ரூபா இரண்டு.

காமணீமது பஞ்சனீ மாத்திரை.

இது தங்கம்; அபரக்பஸ்பம்; கஸ்தூரி. குங்குமப்பூ. லிங்கசெந்தூரம் முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்பகுணத்தைமட்டும் காட்டுகிறேன். நீரிழிவு காசம் இ மல் ஈழை நீராதவாத ரோகம் பிறமேகம் மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்டவாதம் வெள்ளைமுதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். மூன்றுநாளில் நல்லகுணந்தெரியும் சச-நாளில் வியாதி பூரணசுத்தமாகும். காலை மாலை கச-நாள் சாப்பிடக்கூடிய உஅ-மாத்திரைகளின் விலை ரூபா ௫. சச-நாள் சாப்பிடக்கூடிய அஅ-மாத்திரைகள் எடுத்தால் ரூபா கஉ-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிக்கா பிரதம மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுந்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு மேன்சக்கபாலம் தூர்ஸ்திரீ கமனத்தாலுண்டான நோய்கள் வெண்குட்டம் நீரழிவு போகத்தாலுண்டான நோய்களையெல்லாந் தீர்க்கும். இம் மாத்திரையை உக-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். சச-குளிகையின் விலை ரூபா மூன்றரை.

புத்தகங்கள்.

பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானிடர் எவரும் இகபரநன்மைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போற் போதிக்கக்கூடிய மெத்த அருமையானபுத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்காரநடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளாலிய

ற்றப்பட்டு வாசிப்போருக்கு இன்பத்தையு
ர்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள்
பிரதிகள்தான் இருக்கின்றன. காலதாம
ய்ய வேண்டாம்.

க. கோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி
உ. கலிக்கோ ,,
௩. தைத்தொழிற்போதினி மாபிள்கட்டு ,,
கலிக்கோக்கட்டு ,,
ச. பூலோகௌஷதோபகாரி வாணவேடிக்
கைகள் அடங்கிய பத்தாம்சத்தியை க-க்கு
௫. அனேக இங்கிலீஷ்சாமான்களடங்கிய
ஒன்பதாம் சத்தியை ஒன்றுக்கு அ
௬. சோதன்லால் சரித்திரம் ,, அ
எ. இன்ஸ்பெக்ரர் சிபுசாய்புசரித்திரம் அ
அ. ஷை சரித்திரமும் சோதன்லால் சரித்
திரமும் ஒரேகட்டிடம் ஒன்றக்கு
௯. ரூசியயப்பானியயுத்தம் இருபகுதிகள் ஒ
ய. இரசமணி செய்யும் புத்தகம் (அ பக்கம்)

மேற்காட்டியவைகள் வேண்டுவோருக்கு
மின்றிச் சாக்கிரதையோடு அனுப்பப்படும்
வில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிர
கம். மற்ற விபரங்களுக்குக் காட்லாக்கை
பித்துப்பார்க்கவும். இனமாக அனுப்புவாம்
முறை இப்பொருட்களைவாங்கி, தினமும்
டையுங்கள். எமதுவிலாசம்

மகாராஜ கேங்காபிரசாத் பண்டிதர்
மருந்தாலை முதலாம் டிவிசன் No
கொழும்

## அரியபிரதிமைப்பட

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின்
கரும் மாணாக்கருமாகிய வித்துவ
மணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பல
அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம்(P
*rait*) எமது ஞானப்பிரகாச ஆபீசி
வண். கிழக்கு நாஷனல் ஸ்ரூா எ
எஸ். வீராச்சாமிப்பிள்ளையிடத்து
க்குப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ
எஸ். கே. (லோற்றன்) சுனகரெத்
அவர்களால் அமைக்கப்பட்டது.

*Printed and publishec*
*the Proprietor A. Sanmuga*
*na Sarma at the Genasa*
*Press, Jaffna,*

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY